NASTEC

# වාර්ෂික වාර්තාව
# ஆண்ட றிக்கை
# ANNUAL REPORT

# 2021




ජාතික විද්‍යා හා තාක්ෂණ කොමිෂන් සභාව

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு

**National Science and Technology Commission**

# தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு

**ஆண்டறிக்கை 2021**

NASTEC

## பாராட்டுக்கள்

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு வசதிகள் மற்றும் நிதி உதவி வழங்கியமைக்காக தொழில்நுட்ப அமைச்சு மற்றும் திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கு முகாமைத்துவம் அதன் நன்றியைத் தெரிவிக்கின்றது. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மேற்கொள்வதில் அவர்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கும் உதவிகளுக்கும் ஆணைக்குழுவின் தலைவரும் உறுப்பினர்களும் ஆணைக்குழுவின் பணியாளர்களை பாராட்டுகின்றனர்.

# தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு பற்றி

இலங்கை அரசாங்கத்திற்கு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கருமங்கள் மீதான கொள்கைகளை வகுக்கின்ற மற்றும் ஆலோசனை வழங்கும் உச்சமட்ட அமைப்பாக தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு பதவி குறிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழு. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு சனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற ஏழு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

## அமைவிட முகவரி

6ஆம் மாடி, தொகுதி D, ‘‘செத்சிறிபாய’’ கட்டம் II, பத்தரமுல்ல

## தொடர்பு கொள்வதற்கான தகவல்கள்

011- 2186711

011- 2186713

info@nastec.gov.lk

www.nastec.gov.lk

இலங்கை வங்கி, ஹைட்பார்க்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம்

# உள்ளடக்கம் பக்கங்கள்


பாரட்டுக்கள்....................................................................................................................................2

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு பற்றி...............................................................3

உள்ளடக்கம் பக்கங்கள்.....................................................................................................................4

வரைபடங்களின் அட்டவணை ...........................................................................................................5

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தினால் (1994 ஆண்டின் 11 ஆம் இலக்க) பொறுப்பளிக்கப்பட்டவாறான தாழிற்பாடுகள்........................................................................6

எமது பணி .......................................................................................................................................6

எமது தொலைநோக்கு .......................................................................................................................6

...................................................................................................................................................8

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு பற்றிய முகக்குறிப்பு ..........................................8

நிறுவனசார் கட்டமைப்பு....................................................................................................................9

தலைவரின் மீளாய்வு .......................................................................................................................10

ஆணைக்குழு உறுப்பினர்கள்............................................................................................................13

திறைசேரியின் பிரதிநிதிகள் .............................................................................................................14

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் அலுவலர்கள் – 2021 ................................15

செயலாற்றுகைச் சிறப்புகூறுகள் - 2021 ...........................................................................................16

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் தொழிற்பாடு (1): விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திக்காக அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதல்....................................................16

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு தொழிற்பாடு (2): இலங்கையில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளை மீளாய்வுசெய்கின்ற அறிக்கையினை வருடாந்தம் அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தல் ........................................................................................................................17

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு (3): தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்ளின் முன்னேற்றத்தினை மீளாய்தல் .....................................................................17

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுத் தொழிற்பாடு (4): விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் தொடர்பிலான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் மீது அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கு முன்னர் இந்நிறுவனங்களுடன் ஆலோசனைகளை நடாத்துதல் ...............................22

...................................................................................................................................................24

சர்வதேச விவகாரங்கள் ...................................................................................................................27

அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்திற்கான நிலையம் ..................................................................................................27

மனித வள முகாமைத்துவம்..............................................................................................................31

அலுவலர் செய்திகள்.........................................................................................................................32

இயலளவு விருத்தி.:.உள்ளக மற்றும் வெளியிடப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் .......................................33

நலநோம்புகைச் செயற்பாடுகள் .........................................................................................................34

வெளிநாட்டுப்பயிற்சி.:.செயலமர்வுகள்.:.கருத்தரங்குகள்.:. ஆய்வரங்குகளில் பங்கேற்றல் ..........................34

நிதியியல் கூற்றுகள் ........................................................................................................................35

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ...............................................................................37

# வரைபடங்களின் அட்டவணை

வரைபடம் 1: சட்டம், சட்டவாக்கம், தொலைநோக்கு மற்றும் பணி ......................................................6
வரைபடம் 2: நிறுவனசார் கட்டமைப்பு...................................................... .......................................9
வரைபடம் 3 :இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் பற்றிய செயலாற்றுகை மீளாய்வு ...........21
வரைபடம் 4 : பீடைநாசினிப் பதிவாளர் பற்றிய செயலாற்றுகை மீளாய்வு.........................................21
வரைபடம் 5 : சிரேஸ்ட விஞ்ஞானிகள் மன்றச் செயலமர்............................................................................22
வரைபடம் 6 : புலமைச்சொத்து கண்டுபிடித்தல் மற்றும் பாதுகாப்பு மீதான இளம் விஞ்ஞானிகள் மன்ற இணையக் கருத்தரங்கு..................................................................................................................................24
வரைபடம் 7 : சமுத்திர பிளாத்திக்கு மாசாக்கம் மற்றும் நீர்வாழ் உயிரினம் மீதான நுண் பிளாத்திக்கு சமிபாடடைதலின் தாக்கம் பற்றிய இளம் விஞ்ஞானிகள் மன்ற இணையக் கருத்தரங்கு ..24
வரைபடம் 8 : கொவிட்-19 தடுப்பு மருந்தும் திரிபுகளும்: பற்றிய இளம் விஞ்ஞானிகள் மன்ற இணையக் கருத்தரங்கு.....................................................................................................25
வரைபடம் 9 : தேசிய மற்றும் சர்வதேச மானியங்களை எவ்வாறு பெற்றுக்கொள்வது பற்றிய இளம் விஞ்ஞானிகள் மன்ற இணையக் கருத்தரங்கு.........................................................................................25
குபைரசந 10 : தென்னாசியாவில் அணுசாரந்த சிக்கல் தன்மைகள் பற்றிய இளம் விஞ்ஞானிகள் மன்ற இணையக் கருத்தரங்கு.............................................................26
வரைபடம் 11 : அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையத்தின் 15 ஆவது ஆளுகைச் சபைக் கூட்டம்.............................................................................................29
வரைபடம் 12 : 15 ஆவது ஆளுகைச் சபையின் 1 ஆவத பணியக்க கூட்டம்......................................30
குபைரசந 13 : சமூக பொருளாதார அபிவிருத்திக்கான விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க கொள்கை'' மீதான மெய்நிகர் சர்வதேச பயிற்சி..............................................................................................33
வரைபடம் 14 : பல்வகைமையில் மக்களை முகாமை செய்வதற்கதன மென் திறன்களை விருத்திசெய்தல்.......................................................................................................................33

## விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தினால் (1994 ஆண்டின் 11 ஆம் இலக்க) பொறுப்பளிக்கப்பட்டவாறான தாழிற்பாடுகள்

**சட்டமும் சட்டவாக்கமும்**

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுடப் அபிவிருத்திச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டு 1998 ஓகஸ்ட் மாதம் தொழிற்படத் தொடங்கியது. இது, 1998 டிசம்பர் 6 அன்று முறையாக ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் 1999 சனவரியில் தொழிற்பாடு ஆரம்பிக்கப்பட்டது.

### எமது தொலைநோக்கு

"இலங்கை மக்களின் நல்வாழ்வையும் சுபீட்சத்தினையும் மேம்படுத்துவதற்கு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வாய்ப்பு மற்றும் பயன்பாடு பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குகின்ற உன்னதமான நிறுவனமாக திகழ்தல்."

**நோக்கு**

**பணி**

### எமது பணி

"நிலைபெறத்தக்க அபிவிருத்திக்கான பிரயோகத்திற்கென விஞ்ஞானத்திலும் மற்றும் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய இயலளவுகளைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்திற்கு கொள்கைகளை, உபாயங்களை, திட்டங்களை வகுத்தல்"

*வரைபடம் 1: சட்டம், சட்டவாக்கம், தொலைநோக்கு மற்றும் பணி*

- பின்வருவன தொடர்பான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் உள்ளடங்கலாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்:
  - பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் பிரயோகம்;
  - கைத்தொழில், விவசாயம், சேவைகள் மற்றும் பொருளாதாரம் எனபவற்றின் வினைத்திறன் மற்றும் போட்டித்தன்மையில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் தாக்கம்;
  - மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் தாக்கம்;
  - கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி என்பவற்றுக்கு பொறுப்பான அதிகாரிகளுடனான ஆலோசனையுடன் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கு தேவையான மனித மற்றும் ஏனைய வளங்களை மேம்படுத்துதல்;
  - இலங்கையின் இயற்கை வளங்களின் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம்
  - தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் விதத்தில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப விடயப்பரப்புகளை அடையாளப்படுத்தல் மற்றும் முன்னுரிமைளித்தல்;
  - விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தின் உருவாக்கம், தக்கவைப்பு மற்றும் ஈர்ப்புக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குதல்
  - விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கென உற்பத்தித்திறன்மிக்க பிரயோகத்திற்கு உகந்த முகாமைத்துவ உபாயங்களை நிறுவுதல்;
  - விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு நிதியுதவியின் முன்னுரிமை அடங்கலாக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிதி ஒதுக்கீடு;
- முன்னுறுகின்ற ஆண்டில் இலங்கையில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளை மீளாய்வுசெய்து, அத்துடன் மனித வள அபிவிருத்திக்கான வழிமுறைகளின் செயல்திறன்வாய்ந்தன்மை, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயற்பாடுகள், விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் மீதான பொதுச் செலவினங்களின் வினைத்திறன் மற்றும் பொதுத் துறை செயற்பாடுகளினால் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பயன்பாடு மீது வருடாந்தம் அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல்;
- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள் தொடர்பாக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் முன்னேற்றத்தை மீளாய்வுசெய்தல்;


- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் திட்டங்கள் மீது அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கு முன்னர், சம்பந்தப்பட்ட விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் ஆலோசனை நடாத்துதல்.

- அமைச்சரின் முன் அனுமதியுடன் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான இலங்கை மாநாட்டை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூட்டி, சட்டத்தின் 2ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்கள் தொடர்பாக இலங்கையில் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் பற்றி கலந்துரையாடுவதற்கு மன்றமொன்றைத் ஏற்பாடுசெய்தல்; மற்றும் அத்தகைய கலந்துரையாடல்கள் பற்றிய அறிக்கையை அமைச்சரிடம் சமர்ப்பித்தல்.

## தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு பற்றிய முகக்குறிப்பு

- *தலைவர் ஆணைக்குழுவிற்கு தலைமை தாங்குகிறார்.*
- *பணிப்பாளர் பிரதம நிறைவேற்று அலுவலர் ஆவார்.*
- *சிரேஸ்ட விஞ்ஞானிகளும் துறைசார் கொள்கைகள், உபாயத் திட்டங்கள் மற்றும் ஏனைய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான ஆவணங்கள் போன்றவற்றை உருவாக்குதற்கும் தயாரிப்பதற்கும் ஆர்வலகள் மற்றும் ஆலோசனை மன்றங்களுடன் இணைந்து பணியாற்றுகின்றனர்.*
- *சட்டத்தினால் பொறுப்பாணையளிக்கப்பட்டவாறு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் நிறுவனசார் மீளாய்வினைப் மேற்கொள்வதற்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, தொடர்புடைய துறைகளில் இருந்து நிபுணர்களைத் திரட்டுகின்றது.*

## நிறுவனசார் கட்டமைப்பு




*வரைபடம் 2: நிறுவனசார் கட்டமைப்பு*

## தலைவரின் மீளாய்வு

விஞ்ஞான மற்றும் தொழில்நுடப் கருமங்கள் மீது அரசாங்கத்திற்கான கொள்கை வகுக்கும் மற்றும் ஆலோசனை வழங்கும் உச்ச மட்ட நிறுவனமாகவிருக்கின்ற தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க முயற்சிகளை எடுப்பதில் விசேடமாக தொழில்நுட்பம் அடிப்படையிலான பொருளாதாரமொன்றுக்காக முன்னின்று முக்கிய பங்காற்றுகின்றது. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள் பிரதானமாக ஐந்து கருப்பொருள்சார் துறைகளின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டள்ளன. அவையாவன: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் பற்றி அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குவதல், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் நிறுவனசார் மீளாய்வு, விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் ஊக்குவிப்பதற்கு வேறுபட்ட ஆலோசனை மன்றங்கள் ஊடாக விஞ்ஞானிகளையும் பொறியிலாளர்களையும் திரட்டுதல் மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மீதான இலங்கையின் சமவாயத்தினை ஆண்டுக்கு இருமுறை கூட்டுதல். இதற்கு மேலதிகமாக, அணிசேரா அத்துடன் ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்திற்கான மையத்தினூடாக தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு தொடர்நதும் அதன் சர்வதேச ஒத்துழைப்பினை மேற்கொள்கின்றது.

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, தேசிய கொள்கைக் கட்டமைப்புக்கமைவாக பொருளாதார ரீதியாக முக்கியத்தவமிக்க பல விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தக்க முன்முயற்சிகளை மேற்கொள்வதற்கு திட்டமிட்ட போதிலும், திட்டமிட்டவாறு தொடர்ந்தும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் கொவிட்-19 நோய்த்தொற்று கடுமையாக தாக்கம் செலுத்தியது. எனினும், கொவிட்-19 நோய்ப்பரவல் உள்ளடங்கலாக, பல சவால்களுக்கு மத்தியில் 2021 ஆண்டு காலப்பகுதியில் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எய்தக்கூடியதாகவிருந்தது.

அதன் கொள்கை மதியுரை வழங்கும் வகிபாகத்தின் ஒரு பாகமாக, தேசிய கொள்கைக் கட்டமைப்புக்கமைவாக முன்னுரிமை கொள்கைத் துறைகளை தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு தொடர்ந்தும் இனங்கண்டது. அதற்கமைவாக, 2008 இல் உருவாக்கப்பட்ட விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மீதான தேசியக் கொள்ளை மற்றும் 2016 இல் உருவாக்கப்பட்ட தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கட்டமைப்பு என்பவற்றை சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மீளாய்வின் அடிப்படையில், தொடர்புடைய ஆலோசகர்களின் ஆலோசனையுடன் புதிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கக் கொள்கை மற்றும் உபாயம் உருவாக்கப்படும். இதற்கு மேலதிகமாக, உள்நாட்ட விதைக் கொள்கைக்கான தேவையினையும் சுதேச மருத்துவ/ஆயுர்வேத மருத்தாக்கல் நூலொன்றை உருவாக்கும் விதத்தில் சுதேச நோக்குகளை உள்ளடக்குவதற்கு தேசிய சுகாதாரக் கொள்கையினைத் திருத்ததல் என்பவற்றையும் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு முன்மொழிந்தது. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நிறுவனசார் மீளாய்வினை இக்கொள்கைப் பரிந்துரைகள் அடிப்படையாகக் கொண்டிருந்தன.

மீண்டும் மீண்டும் ஏற்பட்ட முடக்கல்கள் மற்றும் போக்குவரத்து மட்டுப்பாடுகள் என்பவற்றுக்கு மத்தியிலும், 2021 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, 5 நிறுவனசார் மீளாய்வுகளை நிறைவுசெய்வதற்கும் மேலுமொரு மீளாய்வினைத் தொடங்குவற்கும் இயலுமாகவிருந்தது என்பதைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். வேறுபட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களுக்கு பத்துக்கும் மேற்பட்ட கோரிக்கைகள் அனுப்பட்ட போதிலும், எவ்வித பதில்களும் கிடைக்கவில்லை. நிறுவனசார் மீளாய்வை முன்னெடுப்பதற்கு பாரிய தடையாகக் காணப்படுவது மீளாய்வைத் தொடங்குவதற்கான அடிப்படை ஆவணமான சுய-மதிப்பீட்டு அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களிடமிருந்து போதியளவு பதில் கிடைக்காமையே என்பது குறிப்பிடப்பட வேண்டும். உரிய நிறுவனங்களிடமிருந்து இறுதி உறுதிப்படுத்தல் சமர்ப்பிப்பதிலுள்ள தாமதங்களும் மெதுவான முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்ற மற்றுமொரு

காரணியாகும். இது தொடர்பில் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கான சட்டரீதியான பொறுப்பாணை ஒட்டுமொத்த மீளாய்வுச் செயன்முறைக்கும் வலுவளிக்கின்ற அதேவேளை, விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கத் துறையின் செலாற்றுகையினை மேம்படுத்தும்.

வேறுபட்ட ஆலோசனை மன்றங்கள் ஊடாக விஞ்ஞானிகளையும் பொறியிலாளர்களையும் திரட்டுதலானது தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் கொண்டு நடாத்தப்படுகின்ற முக்கிய தொழிற்பாடுகளில் ஒன்றாகும். தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் இளம் விஞ்ஞானிகள் மன்றத்தினூடாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பச் செயற்பாடுகளில் இளம் விஞ்ஞானிகளும் பொறியிலாளர்களும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். 2021 ஆண்டுகாலப்பகுதியில் ஏழு இணையான தொழில்நுட்ப அமர்வுகள் ஊடாக 51 நீடிக்கப்பட்ட எண்ணக்கருக்களை வெளியிடுவதற்கு இளம் விஞ்ஞானிகளுக்கு இடமளித்து 9 ஆவது இளம் விஞ்ஞானிகள் மன்ற ஆய்வரங்கினை தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு வெற்றிகரமாக ஏற்பாடுசெய்தது. கேள்வியினால் தூண்டப்படும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் இளம் விஞ்ஞானிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பத்திற்கான புதிய விருதும் ஆணைக்குழு உறுப்பினர்களால் அனுமதிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, தேசிய முன்னுரிமைகளுக்கான கொள்கை தேவைகளை இனங்காண்பதில் ஆதரவளிப்பதற்கு அவர்களை திரட்டுவதற்கான முக்கிய குறிக்கோளுடன் கடந்த 10 ஆண்டுகளாக் செயலிழந்து காணப்பட்ட தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் சிரேஸ்ட விஞ்ஞானிகள் மன்றம் மீளவும் செயற்படுத்தப்பட்டது.

அணிசேரா அத்துடன் ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்திற்கான நிலையத்தின் நோக்கு மையமாக தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு விளங்குகின்றது. அணிசேரா அத்துடன் ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்திற்கான நிலையமானது விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் தெற்கு-தெற்கு ஒத்துழப்பினை ஊக்குவிப்பதற்கு ஆபிரிக்க, ஆசிய மற்றும் ஐரோப்பிய கண்டங்களிலும் இலத்தின் அமெரிக்க நாடுகளிலும் பரந்தளவில் 47 உறுப்பு நாடுகளை பிரதிநிதித்துவம் செய்கின்றது. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலையத்தின் ஊடாக இலங்கை விஞ்ஞானிகளுக்கும் விஞ்ஞான நிர்வாகிகளுக்கும் பல்வேறு பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதற்கு இணைந்துள்ளது. அரசாங்கங்களுக்கிடையிலான இப்பொறிமுறையூடாக உறுப்பு நாடுகளுக்கு மத்தியில் பரஸ்பரம் நன்மையளிக்கும் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க கூட்டிணைப்பு ஊக்குவிக்கப்படுகின்ற அதேவேளை, உறுப்பு நாடுகள் மத்தியில் தேசிய மற்றும் பிராந்திய விஞ்ஞான வலையமைப்புகளுடனான தொடர்புகள் உருவாக்கப்படுகின்றன. அணிசேரா அத்துடன் ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்திற்கான நிலையத்தின் 15 ஆவது ஆளுகைச் சபையினை 2021 இல் நடாத்தும் பொறுப்பை இலங்கை கொண்டிருந்தது. 15 ஆவது ஆளுகைச் சபைக் கூட்டத்தை 2021 பெப்ரவரி 24 அன்று தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு வெற்றிகரமாக நடாத்தக்கூடியதாகவிருந்ததுடன் இந்நிழ்வில் அதிமேதகு சனாதிபதி கலந்து சிறப்பித்தார். 15 ஆவது ஆளுகைச் சபையானது 20 உறுப்புகளின் பங்கேற்புடன் மெய்நிகராக நடாத்தப்பட்டதுடன் 2021-2023 வரை 15 ஆவது ஆளுகைச் சபையின் தலைவராக இலங்கை தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் நியமிக்கப்பட்டார்.

பல சவால்களுக்கும் மத்தியில் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, அதன் பொறுப்பாணையை செயலாற்றக் கூடியதாகவிருந்தபோதிலும், பொறுப்பாணையினை நிறைவேற்றுவதற்கு முழு நேர பிரதம நிறைவேற்று அலுவலரொருவருக்காக கடுமையான தேவை காணப்படுவதனால், தற்போது முன்னெடுக்கப்படுகின்ற உள்ளக ஒழுக்காற்று விசாரணை முன்னுரிமை விடயமொன்றாக கையாளப்பட வேண்டிய வியடமாகவுள்ளது. அதேவேளை, ஒட்டுமொத்த ஆண்டுக்கும் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு தலைவரொருவரைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன் உறுப்பினர் பதவியும் சனவரி தொடக்கம் டிசம்பர் வரை வெற்றிடமாக இருந்தது என்பது மிகவும் துரதிஷ்டமானதாகும். இதன் விளைவாக,

பல கொள்கைத் தீர்மானங்களை எடுக்கும் நிலையில் ஆணைக்குழு இருக்கவில்லை இதுமுன்னேற்றத்தினை குறிப்பிடத்தக்களவு தடைபடுத்தியது.

2021 ஆண்டு காலப்பகுதியில் தொடர்ச்சியான ஆதரவிற்கும் வழிகாட்டலுக்கும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும் நடவடிக்கைகளை நிறைவுசெய்வதில் அவர்களின் முனைப்புமிக்க பங்களிப்புக்காக தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் பணியாளர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

**திருமதி நஸீமா அஹமட்**

பதில் தலைவர்,
தலைவருக்காக

## ஆணைக்குழு உறுப்பினர்கள்



**பேராசிரியை சிறிமலி பர்னாந்து, ஆணைக்குழு உறுப்பினர்.**

பேராசிரியை சிறிமாலி பர்னாந்து, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தின் சிரேஸ்ட பேராசிரியையாவார்.



**பேராசிரியர் சுதத் ரோஹன முனசிங்க, ஆணைக்குழு உறுப்பினர்.**

பேராசிரியர் சுகத் ரொகான் முனசிங்க, மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புப் பொறியியல் பிரிவிற்கு இணைக்கப்பட்டுள்ள பட்டயம் பெற்ற பொறியியலாளராவார்



**கலாநிதி ரவீ லியனகே ஆணைக்குழு உறுப்பினர் (2020 சனவரி 23 தொடக்கம் 2021 டிசம்பர் 15 வரை)**

கலாநிதி ரவீ லியனகே, இலங்கையில் உணவு, தனிப்பட்ட கவனிப்பு, தளபாடத் தயாரிப்பு மற்றும் விநியோக முன்னணிக் கம்பனிகளில் ஒன்றான ரைகம் சாம்ராஜ்யத்தின் தாபகரும், தலைவரும், பிரதம நிறைவேற்று அலுவலருமாவார்



**பேராசிரியை ரேனுகா நில்மினி, ஆணைக்குழு உறுப்பினர்**

பேராசிரியை ஏ.எச்.எல்.ஆர். நில்மினி ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதியாவார்



- 2021ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஒரு உறுப்பினர் பதவிகள் 2021 சனவரி 01 தொடக்கம் வெற்றிடமாகவுள்ளன

**திரு. ருவன் குகுலெவிதான, ஆணைக்குழு உறுப்பினர்**

திரு ருவன் குகுலெவிதான ஆர்எச் ஸ்டீல் பில்டிங் சிஸ்ட்டம் பிறைவெட் லிமிடட் இன் தலைவராக / முகாமைத்துவப் பணிப்பாளராக பணியாற்றுகின்றார்.

## திறைசேரியின் பிரதிநிதிகள்



**திருமதி தர்சினி பிரசாந்த் ஆணைக்குழு உறுப்பினர், (2021 பெப்ரவரி 21 தொடக்கம் 2021 செப்டம்பர் 22 வரை)**

திருமதி தர்சினி பிரசாந்த், தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவில் 2021 செப்டம்பர் 22 வரை திறைசேரியின் பிரதிநிதியாக பணியாற்றினார்.



**கலாநிதி டி ஜி ஜி எஸ் தயானாத் (செப்டம்பர் 22 தொடக்கம் தற்போது வரை 05 டிசம்பர் 2022 வரை)**

கலாநிதி டி ஜி ஜி எஸ் தயானாத் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவில் (செப்டம்பர் 22 தொடக்கம் திறைசேரியின் பிரதிநிதியாக பணியாற்றுகின்றார்.

## தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் அலுவலர்கள் – 2021

| | |
|---|---|
| **2021சனவரி 01 தொடக்கம் டிசம்பர் வரை வெற்றிடம்** | **தலைவர்** |
| **திருமதி நஸீமா அஹமட்** | பதில் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அலுவலர் (2020.06.01 தொடக்கம்) |
| **திரு செயிட் ஸஹ்மி** | சிரேஸ்ட விஞ்ஞானி |
| **திருமதி ஜி சீ குமாரி பீரிஸ்** | பிரதிப் பணிப்பாளர்- நிதி மற்றும் நிர்வாகம் |
| **செல்வி எம் டி திலினி** | விஞ்ஞானி |
| **திருமதி ரசிதா பெரேரா** | விஞ்ஞானி |
| **செல்வி யூ கே டீ எல் எச் கே உடுகம** | நிர்வாக அலுவலர் |
| **திரு எஸ் ஏ டி எஸ் பீ சேனாநாயக** | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப/தரவுத்தள இணை அலுவலர் |
| **திரு ஆர் எம் டி ரத்நாயக** | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - நிதி |
| **திருமதி ஜி எம் சீ என் மஹரகே** | முகாமைத்துவ உதவியாளர் |
| **திருமதி டப்லிவ் எம் ஐ கே வெதமுல்ல** | முகாமைத்துவ உதவியாளர் |
| **திரு அனில் ஹெட்டியாராச்சி** | சாரதி |
| **திரு ஜயசாந்த பிரபாத்** | சாரதி |
| **பிரதீப் திரு எரந்த** | சாரதி |
| **திரு ஏ டி தனபால** | அலுவலக உதவியாளர் |

## செயலாற்றுகைச் சிறப்புகூறுகள் - 2021

### *தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் தொழிற்பாடு (1): விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திக்காக அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதல்*

**01. இலங்கையில் விவசாயத்துறை பழங்கள், காய்கறி பயிர்களுக்காக விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க நடவடிக்கைத்திட்டம் 2021-2025**

இனங்காணப்பட்ட முன்னுரிமைத் துறைகளில் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க கொள்கைச் சாதனங்களை உருவாக்குவதற்கு 2020- 2021 இல் கொரியாவின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை நிறுவனத்துடனான ஆலோசனையுடன் கூட்டுமுயற்சிக் கருத்திட்டம். கொவிட்-19 மற்றும் விவசாயம் மீதான அதன் எதிர்மறையாயன தாக்கம் காரணமாக உற்பத்தித்திறன், பதப்படுத்தல், மற்றும் தொழில்முயற்சியான்மை அபிவிருத்தி என்பவற்றை மேம்படுத்தவதன் மீது விசேட கவனம்செலுத்தி, விவசாயத்துறையில் பணியாற்றுவதற்கு கொரியாவின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை நிறுவனம் மற்றும் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு என்பன இணங்கின. அதற்கமைய, விவசாயத்தில் உற்பத்தித்திறன், பதப்படுத்தல், மற்றும் தொழில்முயற்சியர்மை அபிவிருத்தி என்பவற்றை மேம்படுத்தவதற்கான நடவடிக்கைத் திட்டங்களை உருவாக்குவதற்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, கொரிய ஆலோசகர்களுடனும் 3 உள்நாட்டு ஆலோசகர்களுடனும் பணியைத் தொடங்கியது. இதன் விளைவாக, தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் கூட்டிணைப்புடன் உள்நாட்டு ஆலோசகர்களால் நடவடிக்கைத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. கொவிட் நோய்த்தொற்று நிலைமை காரணமாக தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, தேவையான சேவைகளை காலச்சட்டகத்தினுள் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. கொரிய உபாயக் கருவிகளை உள்ளடக்குவதற்கு ஆரம்பத்திலேயே திட்டமிடப்பட்டிருத்து என்ற விடயத்திற்கு மத்தியிலேயே இது அமைந்திருந்தது. வரைவு திட்டமானது நடைமுறைப்படுத்தலுக்கு பரிசீலனையிற் கொள்வதற்காக கமத்தொழில் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**02. சுதேச நோக்குகளை தேசிய சுகாதாரக் கொள்கையினுள் கூட்டிணைத்தல்**

சுதேச வைத்திய/ஆயுர்வேதக் கொள்ளை அம்சங்களை தேசிய சுகாதாரக் கொள்ளையினுள் கூட்டிணைப்பதற்கான தேவை காணப்படுவதாக பண்டாரநபயக ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்தை மீளாய்வுசெய்வதில் ஈடுபட்ட மீளாய்வார்கள் குழு தீர்மானித்தது. சுபீட்சத்தின் நோக்கு: தேசிய கொள்கைக் கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டவாறு, இது, சுதேச மருத்துவ/ஆயுர்வேத மருந்தாக்கல் நூலொன்றை உருவாக்குவதற்கான ஏறபாடுகளை வழங்கும். மீளாய்வுக் குழாத்தினால் கண்டறியப்பட்டவை மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில், முன்மொழியப்பட்ட கொள்கைத் தேவைகள் பற்றி சுகாதரத் துறையில் உள்ள பொருத்தமான அதிகாரிகளுக்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு தெரியப்படுத்தியுள்ளதுடன் முன்மொழியப்பட்ட கொள்கையை வகுப்பதன் மீதான கலந்துரையாடல்களை சுகாதார அமைச்சுடனும் ஆயுர்வேதத் திணைக்களதுடனும் ஆரம்பித்துள்ளது.

## *தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு தொழிற்பாடு (2): இலங்கையில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளை மீளாய்வுசெய்கின்ற அறிக்கையினை வருடாந்தம் அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தல்*

முன்னுறுகின்ற ஆண்டில் இலங்கையிலுள்ள விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளை மீளாய்வுசெய்து ஆண்டுதோறும் அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கு பொறுப்பாணையளிக்கப்பட்டள்ளது. இவ்வறிக்கையானது மனித வளங்கள் அபிவிருத்திக்கான வழிமுறைகளின் செயல்திறன்வாய்ந்ததன்மையினை மதிப்பிடுதல், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயலாற்றுகை, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மீது அரசாங்க செலவிடலின் செயல்திறன் வாய்ந்த தன்மை, மற்றும் அரசாங்க மற்றும் தனியார் துறை பணிகளில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உபயோகம் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

**01.** <u>விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைமை அறிக்கை 2019-2020</u>

2019-2020 ஆண்டுக்கான தரவு சேகரிப்புச் செயன்முறை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளருடன் இடம்பெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் விளைவாக தாமதமடைந்தது. இது தரவு சேகரிப்பு படிவத்திற்கான மாற்றங்கள், தரவு சேகரித்தல் முறையியலுக்கான மாற்றங்கள், தரவு சேகரித்தலை அதனை ஒத்த வேறு நிறுவனங்களுடன் ஒன்றிணைத்தல் மற்றும் அறிக்கை வடிவம் போன்றனவற்றை உள்ளக்கியிருந்தது. அதற்கமைய, புதிய அறிக்கை வடிவமும் தரவு சேகரிப்புக் கருவிகளும் மாற்றம்செய்யப்பட்டு இறுதிப்படுத்தப்பட்டன. தேவையான தரவுகளைச் சேகரிக்கும் பொருட்டு மாற்றம்செய்யப்பட்ட தரவு சேகரிப்புக் கருவிகள் சுமார் 6 விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டன. மீண்டும் மீண்டும் ஏற்பட்ட முடக்கல்கள் மற்றும் அலுவலகம் மூடப்பட்டமை என்பவற்றின் விளைவைாக தரவு சேகரித்தல் எதிர்பார்க்கப்ட்டது போல் இடம்பெற்றிருக்கவில்லை எனபதுடன் அதன் விளைவாக அறிக்கையை வெளியிடுவதும் தாமதமடைந்தது. 2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை வெளியிடுவதை பிற்போடுவதற்கு இது தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவை நிர்ப்பந்தித்தது.

## *தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு (3): தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்ளின் முன்னேற்றத்தினை மீளாய்தல்*

சட்டத்தின் 2 ஆம் பிரிவில் எடுத்துரைக்கப்பட்ட குறிக்கோள்கள் தொடர்பில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களை மீளாயும் பொறுப்பாணை ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகள் தேசிய முன்னுரிமைகளையும் இலக்குகளையும் நிறைவேற்றுகின்றன என்பதனை உறுதிசெய்வதற்கு அவற்றின் தரம், செலவுச் சிக்கனம், தொடர்புத்தன்மை மற்றும் தாக்கம் என்பனவற்றை மதிப்பிடுவதற்கு தொடர்புடைய துறைகளிலுள்ள நிபுணர்களை உள்ளடக்குகின்ற ஆணைக்குழுவின் அனுமதியுடன் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு மூலம் நியமிக்கப்பட்ட வெளிவாரி குழு ஒன்றினால் மீளாய்வுகள் கொண்டு நடாத்தப்படுகின்றன. கையேட்டினதும் உரிய நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்படும் அடிப்படையில் மீளாய்வு மேற்கொள்ளப்படுவதுடன் தேவையான தகவல்கள் நிறுவனங்களிடமிருந்து ஆர்வலர் ஆலோசனை ஊடாகவும் சேகரிக்கப்படுகின்றன.

மீளாய்வுச் செயன்முறை நான்கு முக்கிய கட்டங்களை கொண்டுள்ளது.

- மீளாய்வுக்கான தயார்படுத்தல்
- நிறுவனத்திற்கு மீளாய்வுக் குழுவின் வருகைகள்
- மீளாய்வுக் குழுவினால் வரைவு அறிக்கையினை தயாரித்தல்
- மீளாய்வு குழுவினால் இறுதி மீளாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல்.

இச்செயன்முறையும் கள அவதானிப்புகளை மற்றும் கலந்துரையாடல்களை அடிப்படையாகக் கொண்டமையினால் கொவிட் 19 உலகலாவிய நோய்த்தொற்று நிலைமை 2021 இல் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயலாற்றுகை மீளாய்வுகளை வெகுவாக பாதித்தது.

எனினும், ஆணைக்குழு, 2020 ஆம் ஆண்டின் போது 7 மீளாய்வுகளை தொடங்கக்கூடியதாக இருந்தது.

முடக்கல்கள், பயணக்கட்டுப்பாடுகள் மற்றும் நேரடியான கூட்டங்களுக்கான வரையறைகள் போன்ற அனைத்தும் மீளாய்வுச் செயன்முறையை கணிசமாகப் பாதித்திருந்தன. இதன் விளைவாக, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் குறிப்பாக உண்மையான சரிபார்த்தலுக்கான பதிலளித்தல் மற்றும் இறுதி ஆவணத்தை அனுமதித்தல் போன்றவற்றில் பல தாமதங்களை அனுபவித்தன. எனினும், 2020 இன் இரண்டாம் அரையாண்டில் தொடங்கப்பட்ட பின்வரும் நிறுவனசார் மீளாய்வுகளை தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு தொடர்ந்து முன்னெடுத்து நிறைவு செய்யக் கூடியதாகவிருந்தது.

1. தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்
2. தேசிய விஞ்ஞான மன்றம்
3. இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனம்
4. இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை
5. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்
6. இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம்
7. பீடைநாசினி பதிவாளர் அலுவலகம்

மேற்குறித்த அறிக்கைகள் ஆணைக்குழுவின் அனுமதிக்காக 2022 இல் சமர்ப்பிக்கப்படும்.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயலாற்றுகை மீளாய்வு விபரங்கள் பின்வருமாறு:

## 1. தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (NERDC)

தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் பற்றிய மீளாய்வினை தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, 2020 செப்டம்பரில் தொடங்கியதுடன் மீளாய்வதற்கென பின்வரும் உறுப்பினர் குழு நியமிக்கப்பட்டது.

1. பேராசிரியர் ஆனந்த ஜயவிக்கரம (தலைவர்)
2. திரு. சிரோமல் பர்நாந்து
3. பேராசிரியர் புத்திக பீ ஜயசேகர

2021 ஏப்பிரலில் வரைவு அறிக்கையினை குழு சமர்ப்பித்ததுன் உண்மையை சாரிபார்கும் போது கிடைக்கப்பெற்ற கருத்துக்களை பரிசீலித்ததன் பின்னர் இறுதி அனுமதிக்காக 2021 ஜூனில் மீளாய்வு அறிக்கையை குழுதேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்கு

சமர்ப்பித்தது. 2021 இல் கிடைக்கப்ப2022 இல் அனுமதிக்காக இவ்வறிக்கையை ற்ற தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் இறுதி அனுமதியுடன் ஆணைக்குழுவிற்கு 2022 இல் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு சமர்ப்பிக்கும்.

## 2. தேசிய விஞ்ஞான மன்றம்

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, 2020 ஓகஸ்ட் 20 அன்று தேசிய விஞ்ஞான மன்றம் பற்றிய மீளாய்வுச் செயன்முறையை தொடங்கியது. மீளாய்வுக்கு குழு பின்வரும் உறுப்பினர் குழாத்தை உள்ளடக்கியிருந்தது.

1. பேராசிரியர் (கலாநிதி) மன்சுள பீ எஸ் மாகமகே (தலைவர்)
2. பேராசிரியர் தியோடர் அலெக்ஸ்சான்டர் பர்நாந்து
3. திரு சாந்த வீரசிங்க

குழாம், 2021 ஒக்டோபரில் வரைவு அறிக்கையினைச் சமர்ப்பித்ததுடன் அவர்களின் கருத்துக்களுக்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு டிசம்பரில் பதிலளித்தது. 2022 கருத்திட்டம் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3. இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனம் (SLINTEC)

இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனம் பற்றிய மீளாய்வு, பின்வரும் நிபுணத்துவ குழுவினால் 2020 ஓகஸ்ட் 12 அன்று தொடங்கப்பட்டது;

1. பேராசிரியர் ஆர் எம் ஜி ராஜபக்ஷ (தலைவர்)
2. பேராசிரியர் பி ஜி ஆர் தர்மரத்தன
3. கலாநிதி அதுல சேனாரத்ன

வரைவு மீளாய்வு அறிக்கையை 2021 மேயில் குழுபெற்றுக்கொண்டதுடன் 2021 ஜூனில் இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனம் வருத்துக்களை வழங்கியிருந்தது. குழாத்திற்கும் லங்கை நனோ தொழில்நுட்ப நிறுவன சிரேஸ்ட அலுவலர்களுக்கும் இடையில் பல கலந்துரையதடல்கள் இடம்பெற்றதுடன் இறுதித் தீர்மானம் 2021 டிசம்பரில் எடுக்கப்பட்டது. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிடமிருந்து அனுமதி கிடைக்கப்பெற்றதுடன் 2022 இல் இவ்வறிக்கை இறுதிப்படுத்தப்படும்.

## 4. இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது நீர்வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை பற்றிய மீளாய்வை 2020 செப்டம்பரில் தொடங்கியதுடன் இந்நோக்கத்திற்காக பின்வரும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

1. பேராசிரியர் ஜே எம் பீ கே ஜயசிங்க (தலைவர்)
2. பேராசிரியர் உபாலி எஸ் அமரசிங்க
3. பேராசிரியர் கே எச் எம் அசோக தீபானந்த

மீளய்வுக் குழு, 2021 மேயில் வரைவு அறிக்கையைச் சமர்ப்பித்ததுடன் 2021 ஓகஸ்டில் நிறுவனம் கருத்துக்களைச் சமர்ப்பித்தது. நீர்வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவம் மற்றும் மீளாய்வுக் குழுஎனபவற்றுக்கிடையிலான கலந்துரையாடலைத் தொடர்ந்து, இறுதி அறிக்கை 2021 நவம்பரில் சமர்பிக்கப்பட்டது. இறுதி அனுமதிக்காக இவ்வறிக்கை 2022 இல் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும்.

## 5. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (ITI)

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கான மீளாய்வுக் குழு பின்வருவோரை உள்ளடக்கியிருந்தது.

1. கலாநிதி சந்ரா எம்புல்தெனிய (தலைவர்)
2. பேராசிரியர் பிரியானி அசோக பரனகம
3. திருமதி டி ஏ சிரியானி சகுந்தலா தென்னக்கோன்

மீளய்வுக் குழு 2021 பெப்ரவரியில் வரைவு அறிக்கையைச் சமர்ப்பித்ததுடன் 2021 ஓகஸ்டில் நிறுவனம் கருத்துக்களைச் சமர்ப்பித்தது. சிரேஸ்ட முகாமைத்துவம் இடையிலான கலந்துரையாடலைத் தொடர்ந்து இறுதி அறிக்கை உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவம் மற்றும் மீளாய்வுக் குழு எனபவற்றுக்கிடையிலான கலந்துரையாடலைத் தொடர்ந்து, இறுதி அறிக்கை 2021 நவம்பரில் சமர்பிக்கப்பட்டது. இறுதி மேயில் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அறிக்கையினை இறுதிப்படுத்துவதற்கு துயை ஆணைக்குழுவொன்று நிறுவப்பட்டது. அறிக்கை கோட்பாட்டு ரீதியாக துணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 6. இறப்பர் ஆரய்ச்சி நிறுவகம் (RRI)

இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் பற்றிய மீளாய்வு 2020 செப்டம்பர் 15 அன்று தொடங்கப்பட்டதுடன் நிபுணர்கள் குழு பின்வருவோரை உள்ளடக்கியிருந்தது.

1. கலாநிதி திருமதி ஐ ஜே த சொய்ஸா (தலைவி)
2. கலாநிதி குமுதினி குணசேகர
3. திரு ஏ ஏ எம் டி அதிகாரி

கொவிட் 19 உலகளாவிய நோய்த்தொற்று நிலைமை காரணமாக குழு மீளாய்வு விஜயங்களை முன்னெடுப்பதற்கு இயலாதிருந்ததனால், 2021 இல் மீளாய்வு வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது. பல கள விஜயங்களை மேற்கொள்ளவும் இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவக அலுவலர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவும் குழுவுக்கு இயலுமாகவிருத்தது.

2021 செப்டம்பரில், குழு அதன் வரைவு அறிக்கையைச் சமர்ப்பித்தது. உண்மையை சரிபார்ப்பதற்கான கருத்துக்கள் கிடைக்கப்பெற்று, சிரேஸ்ட அலுவலர்கள் மற்றும் முகாமைத்துவத்துடனான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதன் பின்னர், இம்மீளாய்வு 2021 டிசம்பரில் நிறைவுபெற்றது. மீளாய்வு அறிக்கை தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் 2022 இல் அனுமதிக்கப்படும்.

*வரைபடம் 3 :இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் பற்றிய செயலாற்றுகை மீளாய்வு*

## 7. பீடைநாசினிப் பதிவாளர் அலுவலகம் (ROP)

பீடைநாசினிப் பதிவாளர் அலுவலகம் பற்றிய மீளாய்வுக் குழு பின்வருவோரை உள்ளடக்கியிருந்தது.

1. பேராசிரியர் வெரன்ஜ கருணாரத்ன
2. கலாநிதி திருமதி ஐ ஜே த சொய்ஸா (தலைவி)
3. பேராசிரியர் பிரதீபா அருணி வீரசிங்க

பேராதனையிலுள்ள பீடைநாசினிப் பதிவாளர் அலுவலகம் அதேபோன்று பயிர்வளரப்பு பயிச் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திலுள்ள அதன் ஆய்வுகூடம் எனபவற்றுக்கு குழு விஜயங்களை மேற்கொண்டது. பீடைநாசினிப் பதிவாளர் அலுவலகத்தின் அலுவலகர்கள் பல எண்ணிக்கையான கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். கமத்தொழில் பணிப்பாளர் நாயகம் மற்றும் கமத்தொழில் திணைக்களத்தின் சில சிரேஸ்ட அலுவலர்களுடனான விசேட கூட்டமொன்றும் இடம்பெற்றது. 2022 இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் மீளாய்வை நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.



*வரைபடம் 4: பீடைநாசினிப் பதிவாளர் பற்றிய செயலாற்றுகை மீளாய்வு*

## *தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுத் தொழிற்பாடு (4): விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் தொடர்பிலான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் மீது அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கு முன்னர் இந்நிறுவனங்களுடன் ஆலோசனைகளை நடாத்துதல்*

**விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திக்கான கொள்கைகள் மற்றும் திட்டகள் மீது அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்**

**கொள்கை சார்ந்த இடைவெளிகளையும் தேவைகளையும் இனங்காண்பதற்கு விஞ்ஞானிகள், பொறியியளார்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் போன்றோரை திரட்டுதல்**

### 01. சிரேஸ்ட விஞ்ஞானிகள் மன்றம்

சிரேஸ்ட விஞ்ஞானிகள் மன்றம் என்பது இலங்கையிலுள்ள விஞ்ஞானிகள் மத்தியில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறையில் ஒத்துழைப்பை ஊக்குவித்து வலுப்படுத்தி மற்றும் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் தொடர்புபட்ட கொள்கைகள் மற்றும் மீளாய்வுகளில் விஞ்ஞானிகளை ஈடுபடுத்தும் குறிக்கோளுடன் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் தொடங்கப்பட்ட ஆலோசனை மன்றங்களில் ஒன்றாகும். 2001 இல் தொடங்கிவைக்கப்பட்ட சிரேஸ்ட விஞ்ஞானிகள் மன்றம், 2010 வரை செயற்பாடுமிக்கதாகவிருந்தது. பல்வேறு சவால்களின் காரணமாக, 2011 தொடக்கம் 2020 வரை சிரேஸ்ட விஞ்ஞானிகள் மன்றம் இயங்கவில்லை.

சிரேஸ்ட விஞ்ஞானிகள் மன்றத்தை மீண்டும் இயங்கச்செய்வதற்கு அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தில் 2021 ஏபிரல் 8 அன்று செயலமர்வொன்று இடம்பெற்றது. சுமார் 80 விஞ்ஞானிகள் நேரடியாகவும் ஷூம் தொழில்நுடபம் வாயிலாகவும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டதுடன் சிரேஸ்ட விஞ்ஞானிகள் மன்றத்தை மீள இயங்கச்செய்வதற்கான தமது அபிப்பிராயஙகளையும் தெரிவித்தனர். முறையான வருடாந்த பொதுக்கூட்டமொன்றினூடாக வழிநடாத்தல் குழுவொன்றினை நியமிப்பதற்கு வழியமைக்கக்கூடிய சிரேஸ்ட விஞ்ஞானிகள் மன்றத்தின் தொடக்க ஆவணங்களையும் கட்டளைச்சட்டத்தையும் வகுப்பதற்கு தற்காலிக பணியாற்றுக் குழுவில் பணிபுரிவதற்கு அவர்கள் மத்தியில், 14 தன்னார்வலர்கள் தெரிவுசெய்யப்பட்டனர் இதற்கமைவாக, மன்றத்திற்கான யாப்பினை வரைவதற்கு 3 பணியாற்றுக் குழு கூட்டங்கள் மெய்நிகராக இடம்பெற்றன். வரைவானது அனுமதிக்காக ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. மன்றத்தின் முதலாவது வழிநடாத்தற் குழுவாக பணியாற்றுக் குழுவினை முறையாக அங்கீகரிப்பதற்கு மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 2022 இல் இடம்பெறும்.





*வரைபடம் 5: சிரேஸ்ட விஞ்ஞானிகள் மன்றச் செயலமர்வு*

## 02. இளம் விஞ்ஞானிகள் மன்றம்

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப தொடர்புபட்ட பிரச்சினைகள் மீது இலங்கையில் உள்ள இளம் விஞ்ஞானிகள் தமது கருத்துக்களை தெரிவிப்பதற்காக அவர்களுக்கு வாய்ப்பினை வழங்குவதற்காக 2000 ஆண்டு தொடக்கம் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் இலங்கையின் இளம் விஞ்ஞானிகள் மன்றம் நடாத்தப்பட்டு வருகின்றது. இளம் விஞ்ஞானிகள் மன்றம் தற்போது வேறுபட்ட துறைகளைச் சேர்ந்த 400 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

### *I.* இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் வழிநடாத்தற் குழு

இளம் விஞ்ஞானிகள் மன்றமானது 13 உறுப்பினர்களைக் கொண்ட வழிநடாத்தற் குழுவொன்றினை உள்ளடக்குகின்றது. வழிநடாதற் குழுவானது இரு இணைச்செயலாளர்களுடன் சேர்த்து தலைவரொருவரினால் தலைமை வகிக்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும், வழமையாக இளம் விஞ்ஞானிகள் மன்ற ஆய்வரங்குடன் இடம்பெறுகின்ற வருடாந்த பொதுக் கூட்டத்தின்போது புதிய வழிநடாத்தற் குழுவொன்று தெரிவுசெய்யப்படுகின்றது. நாட்டில் கொவிட் 19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காரணமாக 2021 வழிநடாத்தற் குழுவானது 2021 மார்ச் 01 அன்று மெய்நிகராக இடம்பெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டது.

### II. இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் வருடாந்த ஆராய்ச்சி ஆய்வரங்கு 2020

2012 இல் ஆரம்பிக்கப்பட்ட இளம் விஞ்ஞானிகள் மன்ற ஆரய்ச்சி ஆய்வரங்கு, வேறுபட்ட துறைகளில் ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டவை மற்றும் ஆராய்ச்சி ஆர்வங்கள் போன்றவற்றை பகிர்ந்துகொள்ளுதல் ஊடாக கூட்டுமுயற்சி ஆராய்ச்சியினை ஊக்குவிக்கின்ற அதேவேளை வலையமைப்பினை ஏற்படுத்துவதற்காகவும் தொழில்நுட்ப தொழில்முயற்சியாண்மை அபிவிருத்திக்காகவும் இளம் விஞ்ஞானிகளுக்கான தளமொன்றினை வழங்கும் முக்கிய குறிக்கோளுடன் பிரபல்யமடைந்த நிகழ்வொன்றாகத் தோற்றம்பெற்றுள்ளது.


ஆராய்ச்சி ஆய்வரங்கின் 10 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக அதன் 10 ஆவது வருடாந்த ஆராய்ச்சி ஆய்வரங்கின் மெய்நிகர் நிகழ்வொன்றாக 2022 மார்ச் 18 அன்று நடாத்துவதற்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது. எண்ணக்கரு சார்ந்த மற்றும் முழுக் கட்டுரைகள் ஆகிய இரண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வுக்கட்டுரைகளுக்காக விடுக்கப்பட்ட அழைப்பற்கு செவிசாய்த்து, 2021 இல் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கு இளம் விஞ்ஞானிகள் மன்ற உறுப்பினர்களிடமிருந்து 58 நீடிக்கப்பட்ட எண்ணக்கருசார்ந்த கட்டுரைகளும் 22 முழுமையான ஆய்வுக் கட்டுரைகளும் கிடைக்கப்பெற்றன. ஒவ்வொரு ஆய்வுக் கட்டுரையும் இரட்டை பொருத்தப்பாட்டு மீளாய்வுச் செய்னமுறையின் கீழ் இரு சிரேஸ்ட விஞஞானிகளால் மதிப்பீடுசெய்யப்பட்டது. 2021 இன் இறுதியளவில் மீளாய்வுச் செயன்முறை முன்னெடுக்கப்பட்டதுடன் மீளாய்வுச் செயன்முறையை நிறைவுசெய்வதற்கு அவர்கள் எதிர்பார்ப்பதுடன் அதன் பின்னர் 2022 மார்ச் இறுதியளவில் ஆரய்ச்சி ஆய்வரங்கு இடம்பெறும்.

### *III. <u>நாட்டின் தேசிய முன்னுரிமைகள் மற்றும் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு இணையக் கருத்தரங்குத் தொடர்</u>*

2021 ஆம் ஆண்டுக்கான இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் செயற்பாட்டுத் திட்டத்தின் பாகமாக இளம் விஞ்ஞானிகள் மன்றம் இணையவழி கருத்தரங்குத் தொடரொன்றனை ஏற்பாடுசெய்தது. இவ்விணையவழிக் கருத்தரங்குகளின் கிரமான குறிக்கோள், நாட்டில் தற்போதைய மற்றும் தோற்றம்பெறுகின்ற அறிவியல் விவகாரங்கள் பற்றி இளம் விஞ்ஞானிகள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்கி அறிவை பரவச்செய்வதாகும். மேற்குறித்த குறிக்கோளின் அடிப்படையில், 2021 ஆம் ஆண்டில் 5 விழிப்புணர்வு இணையக் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

**i. புலமைச்சொத்து கண்டுபிடித்தல் மற்றும் பாதுகாப்பு மீதான இளம் விஞ்ஞானிகள் மன்ற இணையக் கருத்தரங்கு**


இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் முதலாவது இணையக்கருத்தரங்கு 2021 ஏப்ரல் 22 அன்று இடம்பெற்றது. இணையக் கருத்தரங்கு "புலமைச்சொத்து கண்டுபிடிப்புகளும் பாதுகாப்பும்" என்பதை மையப்படுத்தியிருந்ததுடன் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி கீதான்ஜலி ரனவக விருந்தினர் பேச்சாளராகவும் வளவாளராகவும் கலந்துகொண்டு கேட்போருக்கு இணையவழியில் உரை நிகழ்த்தினார். இவ்விணையக் கருத்தரங்கு கேள்வி மற்றும் பதில் அமர்வுடன் வெற்றிகரமாக நிறைவடைந்தது.




*வரைபடம் 6: புலமைச்சொத்து கண்டுபிடித்தல் மற்றும் பாதுகாப்பு மீதான இளம் விஞ்ஞானிகள் மன்ற இணையக் கருத்தரங்கு*

**ii. சமுத்திர பிளாத்திக்கு மாசாக்கம் மற்றும் நீர்வாழ் உயிரினம் மீதான நுண் பிளாத்திக்கு சமிபாடடைதலின் தாக்கம் பற்றிய இளம் விஞ்ஞானிகள் மன்ற இணையக் கருத்தரங்கு**


இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் இரண்டாவது இணையக்கருத்தரங்கு 2021 ஜூலை 21 அன்று இடம்பெற்றது. சமுத்திர பிளாத்திக்கு மாசாக்கம் மற்றும் நீர்வாழ் உயிரினம் மீதான நுண் பிளாத்திக்கு சமிபாடடைதலின் தாக்கம் என்பதை மையப்படுத்தியதாக அமைந்திருந்தது. களனிப் பல்கலைக்கழகத்தின் விலங்கியல் மற்றும் சுற்றாடல் முகாமைத்துவ துறையின் விலங்கியல் மற்றும் சுற்றாடல் முகாமைத்துவ பேராசிரியரான பேராசிரியர் யூ. பி, கே ஏபா விருந்தினர் பேச்சாளராகவும் வளவாளராகவும் கலந்துகொண்டு கேட்போருக்கு இணைய வழியில் உரைநிகழ்த்தினார். சுமார் 65 பங்கேற்பாளர்களின் பங்கேற்புடன் இவ்விணையக் கருத்தரங்கு கேள்வி மற்றும் பதில் அமர்வுடன் வெற்றிகரமாக நிறைவடைந்தது.




*வரைபடம் 7: சமுத்திர பிளாத்திக்கு மாசாக்கம் மற்றும் நீர்வாழ் உயிரினம் மீதான நுண் பிளாத்திக்கு சமிபாடடைதலின் தாக்கம் பற்றிய இளம் விஞ்ஞானிகள் மன்ற இணையக் கருத்தரங்கு*

**iii. கொவிட்-19 தடுப்புமருந்தும் திரிபுகளும்: நாம் எப்போது கூட்டாகப் பாதுகாப்பாகவிருக்க முடியும்? தொடர்பான இளம் விஞ்ஞானிகள் மன்ற இணையக் கருத்தரங்கு**


இளம் விஞ்ஞானிகள் மன்றம், கொவிட்-19 தடுப்புமருந்தும் திரிபுகளும்: நாம் எப்போது கூட்டாகப் பாதுகாப்பாகவிருக்க முடியும்? என்ற அதன் மூன்றாவது இணையக்கருத்தரஙகை 2020 ஓகஸ்ட் 10 அன்று நடாத்தியது. விருந்தினர் பேச்சாளராகவும் வளவாளராகவும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும் மருத்துவ விஞ்ஞானங்கள் பீடத்தின் தோற்றுநோயியல் தற்காப்பு மற்றும் மூலக்கூற்று மருத்துவத் துறை பிரதானியுமான பேராசிரியர் நீலிகா மாலவிகே கேட்போருக்கு இணையவழியில் உரைநிகழ்த்தினார். சுமார் 85 பங்கேற்பாளர்களுடன் இவ்விணையக்கருத்தரங்கு வெற்றிகரமாக நிறைவடைந்தது.




*வரைபடம் 8: கொவிட்-19 தடுப்புமருந்தும் திரிபுகளும்: பற்றிய இளம் விஞ்ஞானிகள் மன்ற இணையக் கருத்தரங்கு*

**iv. தேசிய மற்றும் சர்வதேச மானியங்களை எவ்வாறு பெற்றுக்கொள்வது தொடர்பான இளம் விஞ்ஞானிகள் மன்ற இணையக் கருத்தரங்கு**

இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் நான்காவது இணையக்கருத்தரங்கு 2021 நவம்பர் 24 அன்று இடம்பெற்றது. இவ்விணையக்கருத்தரங்கு தேசிய மற்றும் சர்வதேச மானியங்களை எவ்வாறு பெற்றுக்கொள்வது பற்றியதாகவிருந்ததுடன் தேசிய விஞ்ஞான மன்றத்தின் சர்வதேச விவகாரங்கள் பிரிவின் பிரதானி திரு. ஜே ஜி சாந்த சிறி கேட்போருக்கு இணையவழியில் உரைநிகழ்த்தினார். இவ்விணையக்கருத்தரங்கு சுமார் 90 பங்கேற்பாளர்களுடன் கேள்வி மற்றும் பதில் அமர்வுடன் வெற்றிகரமாக நிறைவடைந்தது.




*வரைபடம் 9: தேசிய மற்றும் சர்வதேச மானியங்களை எவ்வாறு பெற்றுக்கொள்வது பற்றிய* இளம் விஞ்ஞானிகள் மன்ற இணையக் கருத்தரங்கு

v. **தென்னாசியாவில் அணுசாரந்த சிக்கல் தன்மைகள் தொடர்பான இளம் விஞ்ஞானிகள் மன்ற இணையக் கருத்தரங்கு**

இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் ஐந்தாவது இணையக்கருத்தரங்கு 2021 டிசம்பர் 9 அன்று இடம்பெற்றது. இவ்விணையக்கருத்தரங்கு அணுசார்ந்த சிக்கல் தன்மைகள்: அணு நிழலின் கீழ் இலங்கையின் பாதுகாப்புக் கரிசனைகள் பற்றியதாகவிருந்ததுடன் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு மற்றும் உபாயக் கற்கைகள் பீடத்தின் உபாயக் கற்கைகள் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி சனத் டி சில்வா விருந்தினர் பேச்சாளராகவும் வளவாளராகவும் கலந்துகொண்டு கேட்போருக்கு இணையவழியில் உரைநிகழ்த்தினார். சுமார் 50 பங்கேற்பாளர்களின் பங்கேற்புடன் இவ்விணையக்கருத்தரங்கு கேள்வி மற்றும் பதில் அமர்வின் பின்னர் வெற்றிகரமாக நிறைவடைந்தது.




*வரைபடம் 10 தென்னாசியாவில் அணுசாரந்த சிக்கல் தன்மைகள் பற்றிய* இளம் விஞ்ஞானிகள் மன்ற இணையக் கருத்தரங்கு

***VI.*** **<u>தேசிய முன்னுரிமைகளும் நாட்டிலுள்ள பிரச்சினைகளும் பற்றிய இளம் விஞ்ஞானிகள் மன்ற வெளியீட்டுத் தொடர்</u>**

இளம் விஞ்ஞானிகள் மன்றமானது 2021 இல் அதன் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாக இ-நூல் அத்தியாயமொன்றை வெளியிடுத் தொடங்கியது. இவ் இ-நூலின் முக்கிய குறிக்கோள் இனங்காணப்பட்ட விடயமொன்று பற்றி கிடைக்கப்பெறுகின்ற தகவல்கள் தொடர்பில் அனைத்தையும் உள்ளடக்கிய மீளாய்வொன்றினை வழங்குவதும் கொள்கைசார்ந்த இடைவெளிகளை இனங்காண்பதுமாகும். மீளாய்வினை அடிப்படையாகக் கொண்டு, விஞ்ஞான நோக்குகளை கொள்கை வகுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் செயன்முறையினுள் கூட்டிணைக்கின்ற அதேவேளை கொள்கை உருவாக்கச் செயன்முறையில் இளம் விஞ்ஞானிகளும் பங்குதாதராவதற்கு வசதியினைத் தோற்றுவிப்பதற்காக கொள்கை அமுலாக்கத்திற்கான பரிந்துரைகள்/தலையீடுகள் மற்றும் புதிய கொள்கைத் துறைகள் எடுத்துக் காட்டப்படும்.

"சூழல் ஆதார உணவு மற்றும் உணவுப் பாதுகாப்பு: இலங்கைக்கான மிகவும் ஆற்றல்வாய்ந்த கொள்கை முயற்சிகளுக்கான தேவை" என்பது இ-புத்தகத்தின் தலைப்பாகும் அத்துடன் மேற்குறித்த தலைப்பின் கீழ் இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் உறுப்பினர்களிடமிருந்து பல்வேறு விடயத்தலைப்புகள் பற்றிய 20 நூல் அத்தியாயங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன, இவை பூரணமான மீளாய்வுச் செயன்முறையின் பின்னர் இ-நூலின் அத்தியாயத்தினுள் தொகுக்கப்படும். இ-நூலானது 2022 மார்ச்சில் இடம்பெறவுள்ள 10 ஆவது இளம் விஞ்ஞானிகள் மன்ற ஆராய்ச்சி ஆய்வரங்கில் தொடங்கப்படவுள்ளது.

தேசிய முன்னுரிமைகள் மற்றும் நாட்டிலுள்ள தற்போதைய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பிரச்சினைகளை எடுத்துக்காட்டுகின்ற செய்தித்தாள் கட்டுரைகளையும் இளம் விஞ்ஞானிகள் மன்றம், அதன் உறுப்பினர்களிடமிருந்து கோரியது.

***V.* இளம் விஞ்ஞானி விருது**

ஒவ்வொரு ஆண்டும் இளம் விஞ்ஞானிகள் மன்றத்திலிருந்து தெரிவுசெய்யப்படும் உன்னத திறன்மிக்க விஞ்ஞானியொருவருக்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு இளம் விஞ்ஞானி விருது வழங்கி கௌரவிக்கின்றது. பிரதானமாக, கேள்வியினால் தூண்டப்படும் ஆராய்ச்சியினை ஊக்குவிப்பதற்காக 2021 ஆம் ஆண்டிலிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் துணைக் குழுவின் தீர்மானங்களுக்கமைவாக, இரு வகுதிகளில் அதாவது: ‘‘ஆராய்சிக்கான இளம் விஞ்ஞானி’’ மற்றும் ‘‘தொழில்நுட்பத்திற்கான இளம் விஞ்ஞானி’’ என்பவற்றுக்கு இளம் விஞ்ஞானி விருது வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இச்செயன்முறைக்காக, இரு விருதுகளுக்கும் தெரிவு மூலப்பிரமாண புள்ளியிடல் திட்டங்களை திருத்தி இறுதிப்படுத்தியதன் பின்னர், இவ்விருதுக்காக விண்ணப்பிப்தற்கு இலங்கையில் உள்ள இளம் விஞ்ஞானிகளிடமிருந்து தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோரியது. 2021 டிசம்பர் அளவில் மொத்தமாக 42 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. தகைமைக்கமைவாக இவை தெரிவட்டவணைபடுத்தப்பட்டு ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நிபுணத்துவக் குழாத்தினால் அவர்களின் தரப்படுத்தலின் அடிப்படையில் ஒவ்வொரு வகுதியிலும் ஒரு விருதுபெறுபவர் தெரிவுசெய்யப்படுவார். இரு இளம் விஞ்ஞானி விருதுகளும் 2022 மார்ச்சில் இடம்பெறவுள்ள எதிர்வருகின்ற 10 ஆவது இளம் விஞ்ஞானிகள் மன்ற ஆராய்ச்சி ஆய்வரங்கில் வழங்கப்படவுள்ளது.

## சர்வதேச விவகாரங்கள்

### *அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்திற்கான நிலையம்*

1989 ஓகஸ்டிலிருந்து இந்திய அரசாங்கத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட அரசாங்கங்களுக்கிடையிலான நிறுவனமொன்றான அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையமானது (www.namstct.org), விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் தெற்கு-தெற்கு ஒத்துழைப்பினை ஊக்குவிப்பதில் மிகவும் முனைப்புமிக்கதாக விளங்குகின்றது. இலத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க, ஆசிய, மற்றும் ஐரேப்பிய கண்டங்கள் முழுவதும் பரந்துள்ள 47 ஆர்வமிக்க நாடுகளுள் இலங்கையும் ஒன்றாகும். இது, ஏனைய அபிவிருத்திடைந்துவரும் நாடுகளுடன் அணிசேரா நாடுகளின் விஞ்ஞானிகள், தொழில்நுட்பவியலாளர்கள், மற்றும் விஞ்ஞான அமைப்புகள் மத்தியில் பரஸ்பர நலன்களுடன் ஒத்துழைப்பு வசதியினை வழங்குகின்றது. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, இலங்கைக்கான அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையத்திற்கான மத்திய மையாக செயற்படுகின்றது.

அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையம், இதுவரையிலும் இலங்கையில் நடாத்தப்பட்ட விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப துறைகளில் அத்தகைய 7 சர்வதேச நிகழ்வுகள் உள்ளடங்கலாக பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் சுமார் 84 சர்வதேச செயலமர்வுகள் மற்றும் பயிற்சிப் பாடநெறிகளை ஏற்பாடு செய்துள்ளது. இந்நிகழ்வுகள் மூலம் இலங்கையிலிருந்து அதிக எண்ணிக்கையிலானோர் உள்ளடங்கலாக பாரியளவிலான ஆராய்ச்சியாளர்கள் மற்றும்


தொழிலசார் நிபுணர்கள் நன்மையடைந்தனர். அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையத்தின் ஆளுகைச் சபைகளின் பணியக கூட்டங்கள் கடந்த 2004, 2010, மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் 3 தடவைகள் இலங்கையினால் நடாத்தப்பட்டன. அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையத்தின் 15 ஆவது ஆளுகைச் சபைக் கூட்டம் இலங்கை, கொழுப்பில் 2020 செப்படம்பரில் இடம்பெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்துடன் கொவிட்-19 உலகலாவிய நோய்த்தொற்று காரணமாக அநேகமான உறுப்பு நாடுகளில் நிலவுகின்ற நிலைமையின் காரணமாக கலந்த நிகழ்ச்சியொன்றாக 2021 பெப்ரவரி 24 அன்று இடம்பெற்றது.

## I. அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையத்தின் 15 ஆவது ஆளுகைச் சபைக் கூட்டம்

அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையத்தின் 15 ஆவது ஆளுகைச் சபைக் கூட்டமானது தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் ஏற்பாடுசெய்யப்பட்ட மெய்நிகர் வாயிலாக 2021 பெப்ரவரி 24 அன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் இலங்கையின் தொழில்நுட்ப அமைச்சர் என்ற வகையில் அதிமேதகு சனாதிபதி கலந்து சிறப்பித்ததார். இந்நிலையத்தின் உறுப்பு நாடுகள் அல்லாத மாலைதீவுகள், ஓமான், ரூமேனிய மற்றும் துருக்கி ஆகிய நான்கு நாடுகளினதும் இராஜதந்திர தூதரகங்களின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக 24 நாடுகளில் இருந்து 96 பேராளர்களும், பல்வேறு இலங்கை அமைச்சுக்கள் மற்றும் விஞ்ஞான முகவராண்மைகளின் பிரதம நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் சிரேஸ்ட அலுவலர்கள் அத்துடன் அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலைய செயலகத்தின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். தொடக்க வைபவமும் பணியாற்றுக் குழுக்கூட்டமும் நேரடியாகப் பங்கேற்ற சுமார் 20 இலங்கைப் பேராளர்களினதும் ஷூம் மாநாட்டுத் தளத்தின் வாயிலாக இணைந்த சர்வதேச பேராளர்களினதும் பங்கேற்புடன் கொழும்பில் மிலோடா நிதியியல் ஆய்வுநிலையத்தில் இடம்பெற்றது.

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரொஹான் முனசிங்க, தொடக்க நிகழ்வின்போது பேராளர்களையும், பிரதம அதிதியான சனாதிபதியும் கௌரவ தொழிலிநுட்ப அமைச்சருமான அதிமேதகு கோட்டாபய ராஜபக்ஷ அவர்களையும் வரவேற்று, காணொலிச் செய்தியூடாக கலந்துகொண்டோருக்கு உரைநிகழ்த்தினார். சாத்தியமிக்க அனைத்துத் துறைகளிலும் புதிய தொழில்நுட்பங்களையும் அறிமுகப்படுத்தவதற்கு இலங்கை தனியான தொழில்நுட்ப அமைச்சை தாபித்துள்ளதென அதிமேதகு சனாதிபதி வலியுறுத்தினார். உறுப்பு நாடுகளின் பொதுவான ஆவர்வங்களை இனங்கண்டு அனைவருக்கும் நன்மைபயக்கவல்ல ஒத்துழைப்புமிக்க பொறிமுறையொன்றினை உருவாக்குவதில் அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையம் பாரியளவில் பங்காற்ற முடியும் என சனாதிபதி முன்மொழிந்தார். இவ் உலகளாவிய நோய்த்தொற்று நிலைமையினுள் குறிப்பாக காலநிலை மாற்றம் தொடர்பில் எமது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு நாம் எவ்வாறு சிறந்த முறையில் ஒத்துழைப்பு நல்க முடியும் என்பதை பரிசீலிப்பதாற்கான அவரது விருப்பத்தையும் சனாதிபதி வெளிப்படுத்தினார்.


பணியாற்றுக் குழுக் கூட்டத்தின் பொது, 15 ஆவது ஆளுகைச் சபையின் தலைவாராக இலங்கையின் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் திரு. ஜயந்த டி சில்வா தெரிவுசெய்யப்பட்டார்.




*வரைபடம் 11 : அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையத்தின் 15 ஆவது* ஆளுகைச் சபைக் கூட்டம்

## II. 15 ஆவது ஆளுகைச் சபையின் 1 ஆவது பணியகக் கூட்டம்

அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையத்தின் ஆவது ஆளுகைச் சபையின் 1 ஆவது பணியகக் கூட்டம் 2021 செப்டம்பர் 20 அன்று மெய்நிகர் வழியில் இடம்பெற்றது. இது, எகிப்து அரபுக் குடியரசு அரசாங்கத்தின் விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப கல்வி நிலையத்தினால் நடாத்தப்பட்டது. இலங்கைக்கான அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையத்தின் தொடர்பு மையமாக தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆணைக்குழு உள்ளடங்கலாக உறுப்பு நாடுகளிலுள்ள அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையத்தின் மைய தொடர்புநிலையங்கள் அடங்கலாக 20 நாடுகளில் இருந்து 43 பேராளர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். இலங்கை அரசாங்கத்தின் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளரும் அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையத்தின் 15 ஆவது ஆளுகைச் சபை தலைவருமான திரு ஜயந்த டி சில்வா, தொடக்க மற்றும் பணியாற்று மட்டக் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.




*வரைபடம் 12 : 15 ஆவது ஆளுகைச் சபையின் 1 ஆவது பணியகக் கூட்டம்*

அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையத்தின் உறுப்பு நாடுகளால் ஏற்பாடு செய்யப்படுகின்ற செயலமர்வுகள், கருத்தரங்குகள். மாநாடுகள், மற்றும் வேறு குறுகிய கால மற்றும் நடத்தர கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றில் பங்கேற்பதற்கு விஞ்ஞானிகளுக்கும் வேறு அலுவலர்களுக்கும் இந்நிலையம் வாய்ப்பளிக்கின்றது. 2021 இல் கொவிட் நிலைமைகள் காரணமாக, அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட நிகழ்வுகள் மேய்நிகர் முறையில் இடம்பெற்றதுடன் அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையத்தின் நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கு பினவரும் இலங்கை விஞ்ஞானிகளுக்கு வாய்ப்புக்கிடைத்தது.

**அபிவிருத்தியடைந்துவரும் தேசங்களுக்கான வினைத்திறன்வாய்ந்த விவசாயம்: தீவு அரசுகளுக்கான பரந்த நோக்குகளும் விசேட சவால்களும். 2021 மார்ச் 31- ஏப்ரல் 1 (மெய்நகர் முறையில்)**

1. கலாநிதி உவசரா திசாநாயக. சிரேஸ்ட விரிவுரையாளர், விவசாய விவரவாக்கத் துறை, விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
2. கலாநிதி கந்தையா பகீரதன், தலைவர் மற்றும் சிரேஸ்ட விரிவுரையாளர், விவசாய உயிரியல் துறை, விவசாய பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
3. கலாநிதி ஜி வி ரி வி வீரசூரிய, சிரேஸ்ட விரிவுரையாளர், விவசாயப் பொறியியல் மற்றும் சமூக விஞ்ஞானத் துறை, விவசாய பீடம், ரஜரட்ட பல்கலைக்கழகம்

**"2021 மார்ச் 11-12 காலப்பகுதியில் அதிக நில மின்னல் அடர்த்தியுடன் கூடிய நாடுகளில் மின்னல் அபாய கட்டுப்பாட்டு உபாயங்களின் கொள்கை அபிவிருத்தி" மீதான சர்வதேச வட்டமேசை மாநாடு (மெய்நகர் முறையில்)**

1. செல்வி அனோஜா சேனவிரத்ன, பணிப்பாளர் (தணிப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி), அனர்த்த முகாமைத்துவ நிலையம்.
2. எந்திரி. டி. ரி. ரூபசிங்க, பிரதிப் பணிப்பாளர், - கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு, கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம்.

**சக்திப் பாதுகாப்பும் சக்திக்கான பெறுவழியும் : அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் தரங்குறைந்த சக்தியின் ஆரோக்கிய உள்ளார்ந்தங்கள், 2021 ஜூலை 26-27 (மெய்நகர் முறையில்)**

1. கலாநிதி ரி எம் எம் மார்ஸோ, சிரேஸ்ட ஆராய்ச்சி விஞ்ஞானி, பெற்றோலியம் மற்றும் உராய்வுநீக்கி பரிசோதனை ஆய்வுகூடம், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்.

**தொழில்நுட்ப பரிமாற்றலும் வர்த்தகமயமாக்கலும்" மீதான அணிசேரா உறுப்பு இணைந்த சர்வதச செயலமர்வு 2021 டிசம்பர் 7-8 (மெய்நகர் முறையில்)**

1. வைத்திய கலாநிதி கே.ஜி. அனோஜா அத்தநாயக, தலைவர் மற்றும் சிரேஸ்ட விரிவுரையாளர், உயிரியல் இரசாயனத் துறை, மருத்துவ பீடம், உருகுணை பல்கலைக்கழகம்
2. கலாநிதி ஏ கே ரணவீர, சிரேஸ்ட விரிவுரையாளர், பௌதீகவியல் மற்றும் மின்னியல் துறை, களனிப் பல்கலைக்கழகம்.
3. கலாநிதி பிரதீப் டப்லிவ் சமரசேகர, சிரேஸ்ட விரிவுரையாளர் மற்றும் பணிப்பாளர், பல்கலைக்கழக் வியாபார தொடர் நிலை பணிப்பாளர், கணினியில் மற்றும் தொழில்நுட்பத் துறை, களனி பல்கலைக்கழகம்.
4. திரு. பீ சி. அபேசிறிவர்த்தன, பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்), திறன் அபிவிருத்தி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு

## மனித வள முகாமைத்துவம்

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கருமங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு கொள்கை வகுப்பதற்காகவும் மதியுரை வழங்குதற்குமான உச்சமட்ட நிறுவனமொன்றாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு பதவிகுறிக்கப்பட்டுள்ளது. மேற்குறித்த கடமைப்பொறுப்பினை நிறைவுசெய்வதற்காக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது நிறுவனசார் இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைந்துகொள்வதற்கான அணியொன்றாக மிக முக்கிய பங்கொன்றினை ஆற்றுவதுடன் நாட்டில் விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் அபிவிருத்தி செய்வதை நோக்கிப் பாபடுகின்றது.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குவின் நிறுவனசார் கட்டமைப்பிற்கு அமைவாக, ஆணைக்குழுவின் பிரதானியாக தலைவர் செயற்படுகின்றார். பணிப்பாளர் பிரதம நிறைவேற்று அலுவலராவார். துறைசார் கொள்கைகள், உபாயத்திட்டங்கள் மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்புடைய ஆவணங்களை வகுத்து தயாரிப்பதில் சிரேஷ்ட விஞ்ஞானிகளும் விஞ்ஞானிகளும், ஆர்வலர்கள் மற்றும் ஆலாசனை மன்றத்துடன் இணைந்து உதவி, ஒத்துழைப்பு வழங்குகின்றனர். தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் நிதி முககமைத்துவம், பிரதிப் பணிப்பாளரொருவரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. நிருவாக அலுவலர், இரண்டு நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்-நிதி மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தரவுத்தள இணைப்பாளர்), 5 முகாமைத்துவ உதவியாளர்கள், 2 அலுவலக உதவியாளர்கள், 3 சாரதிகள் ஆகியோரைக் கொண்ட அணி துணையளிக்கின்ற பதவியினரை உள்ளடக்குன்கின்றது. குறிப்பான கடமைகளுக்காகவும் ஒப்படைகளுக்காகவும் தேவையின் அடிப்படையில் ஆணைக்குழுவின் அனுமதியுடன் ஆராய்ச்சி உதவியாளர்களும் ஆலோசகர்களும் வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றனர்.

**2021.12.31 அன்று உள்ளவாறு பதவியினர் பற்றிய தகவல் தொகுப்பு**

| **பதவியினர் வகை** | **அனுமதிக்கப்பட்ட பதவியணி** | **தற்போதுள்ள பதவியணி** |
|---|---|---|
| **உயர் முகாதைத்துவம் (HM 2-3)** | 01 | 01 |
| **விஞ்ஞானிகள் (AR -2, AR – 1)** | 04 | 03 |
| **நடுத்தர முகாமையாளர் (MM 1-1)** | 01 | 01 |
| **கனிஷ்ட முகாமையாளர் (JM 1-2)** | 01 | 01 |
| **முகாமைத்துவ உதவியாளர்கள் (MA – 3)** | 02* | 02 |
| **முகாமைத்துவ உதவியாளர்கள் (MA- 1-2)** | 05 | 01 |
| **ஆரம்ப நிலை (PL 3, PL 1)** | 05 | 04 |

02* நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - நிதி பதவியானது பதவிவகிப்பவருக்கு தனித்துவமானது

## அலுவலர் செய்திகள்


- சிரேஸ்ட விஞ்ஞானியான செய்ட் ஸஹ்மி, பட்டயம்பெற்ற புள்ளிவிபரவியலாளராக (CStat) ரோயல் புள்ளவிபரவியல் சங்கத்தினால் பட்டய அந்தஸ்த்து வழங்கி கௌரவிக்கப்பட்டார். பட்டயம்பெற்ற புள்ளிவிபரவியலாளர் என்பது ரோயல் புள்ளவிபரவியல் சங்கத்தின் அதிஉயர் தொழில்சார் தகைமையாகும். புள்ளிவிபரவியல், உயர் தர தொழில்சார் புள்ளிவிபரவியல் செயற்பாடு, மற்றும் புள்ளிவிபரவியல் கோட்பாடு பற்றி முன்னணியில் இருப்பதற்கான கடமைப்பொறுப்பு மற்றும் தமது தொழில்சார் வாழ்க்கை ஊடான நடத்தை என்பவற்றில் உறுப்பினரொருவரின் தகைமைகளுக்கு முறையான அங்கீகாரத்தை இது வழங்குகின்றது.

- சிரேஸ்ட விஞ்ஞானியான செய்ட் ஸஹ்மி, உயர்தர பட்டியலிடப்பட்ட கற்றறிவாளர் மருத்துவச் சஞ்சிகையொன்றில் வெளியிடப்பட்ட “இலங்கையின் வட-மேல் மாகாணத்தின் ஆரம்ப வைத்தியசாலைகளில் கணுக்காலிகள் மூலம் தீண்டப்பட்ட மற்றும் குத்தப்பட்ட மருத்துவ- நோயியல் என்ற அவரது கூட்டு சுகாதாரக் கொள்கை ஆராய்ச்சிப் பணிகளில் ஒன்றுக்காக இலங்கைத் தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் சிறப்பு விருது 2021 வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்

- செல்வி நிஸாந்தி மஹுரகே, 2021 டிசம்பர் 21 அன்று முகாமைத்துவ உதவியாளர் பதவிவிலகினார்


## இயலளவு விருத்தி:.உள்ளக மற்றும் வெளியிடப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

- விஞ்ஞானி செல்வி திலினி முனகமகே 2021 ஓகஸ்ட 30 தொடக்கம் செப்டம்பர் 4 வரை மலேசியாவின் தெற்கு-தெற்கு ஒத்துழைப்பிற்கான சர்வதேச விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க நிலையத்தினால் நடாத்தப்பட்ட “சமூக பொருளாதார அபிவிருத்திக்கான விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க கொள்கை” மீதான மெய்நிகர் சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்றார்.



*வரைபடம் 13 : சமூக பொருளாதார அபிவிருத்திக்கான விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க கொள்கை” மீதான மெய்நிகர் சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்*

- நிருவாக அலுவலர் திருமதி லக்மினி உடகம், 20121 ஒகஸ்ட் 31 அன்று நிதியியல் ஆய்வுகளுக்கான மிலோடா கல்வி நிலையத்தினால் நடாத்தப்பட்ட “பல்வகைமையில் மக்களை முகாமைசெய்வதற்கதன மென் திறன்களை விருத்திசெய்தல்” மீதான இணையவழிக் கருத்தரங்கில் கலந்துகொண்டார்.



*வரைபடம் 14 : பல்வகைமையில் மக்களை முகாமை செய்வதற்கான மென் திறன்களை விருத்திசெய்தல்*

## நலநோம்புகைச் செயற்பாடுகள்

2021 ஆம் ஆண்டின்போது தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் நலநோம்புகைச் சங்கத்தினால் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களும் நிகழ்வுகளும் நடாத்தப்பட்டன

### கிரமமான செயற்பாடுகள்

சிங்கள, தமிழ் புத்தாண்டுக்காக ஒவ்வொரு அலுவலருக்கும் ரூ. 25,000 தொகையுடைய குறைந்த வட்டி கடன் வசதி வழங்கப்பட்டது.

## வெளிநாட்டுப்பயிற்சி.˙.செயலமர்வுகள்.˙.கருத்தரங்குகள்.˙. ஆய்வரங்குகளில் பங்கேற்றல்

சிரேஸ்ட விஞ்ஞானியான செய்ட் ஸஹ்மி, 2021 ஓகஸ்ட் 30 தொடக்கம் செப்டம்பர் 2 வரை மெய்நிகராக இடம்பெற்ற அரசாங்கங்களுக்கான விஞ்ஞான ஆலோசனை மீதான 4 ஆவது மாநாட்டில் ''விஞ்ஞான ஆலோசனையில் புத்தாக்கம்'' என்ற கலைக்கூட அமர்வில் ''கொள்கைக்கான தரவுகளால் இயக்கப்படும் விஞ்ஞானத்திற்கான புதிய வாய்ப்பு- ஆற்றல்மிக்க விஞ்ஞான சான்றினை உருவாக்குவதற்காக முன்மொழியப்பட்ட முறைமை'' இனைச் சமர்ப்பித்தார். கணடா அரசாங்கத்தின் கியூபெக் பிரதம விஞ்ஞானி அலுவலகத்தின் அரசாங்க விஞ்ஞான ஆலோசனைக்கான சர்வதேச வலையமைப்பு இந்நிழ்வை ஏற்பாடுசெய்வதற்கு ஒத்துழைத்தது.

# நிதியியல் கூற்றுகள்

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு
**நிதியியல் நலைக்கூற்று**
**2021 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு**
(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன)

| | குறிப்பு | 2021 | 2020 |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | | |
| **நடைமுறைச் சொத்து** | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 1 | 1,023,097 | 2,203,844 |
| பதிவேட்டுப்பொருட்கள்/கையிருப்புகள் | 2 | 96,453 | 81,905 |
| முற்கொடுப்பனவுகள் | 3 | 7,551 | 19,009 |
| அலுவலர் கடன்கடன் -குறுகிய காலம் | 4 | 243,833 | 223,195 |
| | | **1,370,934** | **2,527,953** |
| **நடைமுறையற்ற சொத்துகள்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரணங்கள் | 5 | 1,642,696 | 1,690,478 |
| மீளளிக்கத்தக்க வைப்புகள் | 6 | 75,500 | 75,500 |
| அலுவலர் கடன்கடன் -நீண்ட காலம் | 7 | 484,500 | 264,948 |
| | | **2,202,696** | **2,030,926** |
| **மொத்த சொத்துகள்** | | **3,573,630** | **4,558,879** |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| அட்டுறு செலவுகள் | 8 | 9, 862,883 | 7,330,862 |
| **நடைமுறையற்ற பொறுப்புகள்** | | | |
| பிற்போடப்பட்ட வருமானம் | 9 | 758,012 | 783,915 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 10 | 4,244,226 | 4,002,944 |
| | | **5,002,238** | **4,786,859** |
| **மொத்த பொறுப்புகள்** | | **14,865,121** | **12,117,721** |
| மொத்த தேறிய சொத்துகள் | | **(11,291,491)** | **(7,558,842)** |
| **தேறிய சொத்துகள்/பங்குரிமை மூலதனம்** | | | |
| ஒன்றுசேர்க்கப்பட்ட நிதியம் | | 1,907,459 | 1,907,071 |
| மீள்மதிப்பீட்டு மிகைகள் | | 3,741,947 | 3,763,824 |
| ஒதுக்கு | | (16,940,897) | (13,229,737) |
| மொத்த தேறிய சொத்துகள்/பங்குரிமை மூலதனம் | | **(11,291,491)** | **(7,558,842)** |

01 முதல் 01 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் 07 முதல் 11 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுகளின் இன்றியமையாத பாகங்களாகும். இந்நிதியியல் கூற்றுகளை தயாரிப்பதும் எடுத்துரைப்பதும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் பொறுப்பாகும். இந்நிதியியல் கூற்றுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களால் அனுமதிக்கப்பட்டு அவர்கள் சார்பில் ஒப்பமிடப்பட்டதாகும்.

| | | |
|---|---|---|
| (ஒப்பம்) | (ஒப்பம்) | (ஒப்பம்) |
| தலைவி | பதில் பணிப்பாளர் | நிருவாக அலுவலர் |

(2020 சனவரி 17 தொடக்கம் 2020 டிசம்பர் 31 வரை)
2021 ஏப்ரல் 01 அன்று பரிஸில் வைத்து ஒப்பமிடப்பட்டது
(ஒப்பம்)
ஆணைக்குழு உறுப்பினர்

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு
**நிதியியல் செயலாற்றுகைக் கூற்று**
**2021 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு**
(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன)

| | குறிப்பு | 2021 | 2020 |
|---|---|---|---|
| **வருவாய்** | | | |
| மீண்டெழும் அளிப்பு | | 19,029,100 | 25,264,065 |
| மூலதன அளிப்பு – ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | | 1,619,000 | 1,096,000 |
| மூலதன அளிப்பு - இயலளவு விருத்தி | | - | - |
| அரசாங்க அளிப்பின் பெறுமதிக் குறைப்பு | | 551,393 | 3,056,029 |
| வருமானம் | 11 | 30,728 | 101,358 |
| | | **21,230,221** | **29,517,452** |
| **செலவுகள்** | | | |
| ஆள்சார் வேதனாதிகள் | 12 | 10,120,018 | 13,361,306 |
| பிரயாணக் கொடுபட்பனவு | 13 | 2,734 | 15,531 |
| வழங்கல் மற்றும் பயன்படுத்தப்பட்ட நுகர்பொருட்கள் | 14 | 297,765 | 320,496 |
| பராமரிப்பு | 15 | 656,690 | 677,742 |
| ஒப்பந்த சேவைகள் | 16 | 7,412,177 | 6,663,219 |
| மாற்றல்கள் | 17 | 4,486,086 | 4,443,935 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 18 | 1,333,158 | 2,948,607 |
| கூட்டச் செலவுகள் | 19 | 81,360 | 997,519 |
| பெறுமானத் தேய்வு மற்றும் பெறுமதிக் குறைப்பு செலவுகள் | 5 | 551,393 | 3,056,029 |
| **மொத்த செலவுகள்** | | **24,941,381** | **32,484,348** |
| தொழிற்பாட்டு நடவடிக்கைளிலிருந்து மிகை/ (பற்றாக்குறை) | | **(3,711,160)** | **(2,966,932)** |
| **நிதிச் செலவுகள்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரண விற்பனை மீதான பெறுகைகள் | | - | (341,104) |

*வரைபடம் 16: நிதியியல் நிலைக் கூற்று*

| | | |
|---|---|---|
| காலத்திற்கான தேறிய மிகை/(பற்றாக் குறை) | **(3,711,160)** | **(3,308,036)** |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

2022 ஓகஸ்ட் 15

தலைவர்
தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு

**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2021 டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

## 1. நிதியியல் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

2021 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதியியல் நிலைக் கூற்று மற்றும் அத்திகதியன்று முடிவுற்ற ஆண்டுக்கான அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்று, பங்குரிமை மூலதன மாற்றக் கூற்று, அத்திகதியன்று முடிவுற்ற ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்குகின்ற தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் நிதியியல் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1)ஆம் உறுப்புரை மற்றும் 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அபிப்பிராயத்தின் பிரகாரம், எனது அறிக்கையின் ‘முனைப்பலியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை’ பிரிவில் விவரிக்கப்பட்ட விடயங்களுக்கான விளைவுகள் தவிர, ஆணைக்குழுவின் நிதியியல கூற்றுகள், இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக 2021 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான் நிதியியல் நிலைமை, அத்திகதியன்று முடிவுற்ற ஆண்டு காலப்பகுதியில அதன் நிதியியல் செயலாற்றம் மற்றும் அதன் காசுப்பாய்ச்சல் பற்றிய உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பலியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

ரூ. 20.4 பெறுமதியுடைய ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மூலம் ஆணைக்குழுவின் செலவு முழுமையாக தேய்மானம்செய்யப்பட்டிருந்த போதிலும், ஏற்கனவே பயன்பாட்டிலுள்ள ரூ. 16.7 மில்லியன் பெறுமதியுடைய சொத்துகளின் விளைவு ஆயுட்காலம் மீது மதிப்பிடப்பட்ட குறைபாடானது இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்தம் செய்யப்பட்டு நிதியியல் கூற்றுகளில் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பலியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும்

பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை - 2021 இல் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்**

ஏனைய தகவல்கள் என்பது கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் எனக்கு கையளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை 2021 இல் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் எனப் பொருள்படும் என்பதுடன் எவ்வாறாயினும், விடயத்தின் மீது எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாதவையாகும் வேறான இத்தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புடையதாகும்.

வேறு தகவல்கள் நிதியியல் கூற்றுகள் மீதான எனது அபிப்ராயத்தினால் உள்ளடக்கப்படவில்லை அத்துடன் அதன் மீது ஏதேனும் சான்றினை நான் செய்யவுமில்லை அல்லது அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தவுமில்லை.

நிதியியல் கூற்றுகள் மீதான எனது கணக்காய்வின் நியதிகளுக்குமைய எனது பொறுப்பானது கிடைக்கப்பெறுகின்ற போது மேலே இனங்காணப்பட்ட வேறு தகவல்களை வாசிப்பதும், வேறு தகவல்கள், நிதியியல் கூற்றுகளுடன் அல்லது கணக்காய்வில் அல்லது ஏதேனும் வேறு வடிவத்தில் சேகரிக்கப்பட்ட எனது அறிவுடன் பொருண்மையாக இணங்கவில்லையா என்பதனை பரிசீலிப்பதுமதாகும்.

ஆண்டறிக்கை 2021 பொருண்மையாக பிறழ்வுக் கூற்றுகளை உள்ளடக்குகின்றது என ஆண்டறிக்கை பற்றி எனது வாசிப்பில் நான் தீர்மானித்திருப்பின், உரிய சீராக்களுக்காக அத்தகவல்கள் நிர்வாக அதிகாரிகளுக்கு அறிவிக்கப்படல் வேண்டும். பிறழ்வுக் கூற்றுகள் மேலும் சீர்செய்யப்படாதிருப்பின், அரசியல் யாப்பின் 154(6) ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

1.4 **நிதியியல் கூற்றுகள் மீதான முகாமைத்துவத்தினதும் நிரவாகத்தினதும் பொறுப்புக்கள்**

இலங்கை அரசாங்க கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கி இந்நிதியியல் கூற்றுகளை தயாரித்தலை இயலச்செய்வதற்கு தேவையான உள்ளக நிர்வாகத்தினையும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான தவறுக் கூற்றுகளின்றி அவற்றை நியாயமாக எடுத்துரைப்பதனையும் தயாரிப்பதனையும் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியியல் கூற்றுகளை தயாரிப்பதில் ஆணைக்குழு தொடர்ச்சியான இயங்குவதற்கும் ஆணைக்குழுவினை தீர்த்துக் கட்டுவதற்கு முகாமைத்துவம் உத்தேசிக்கின்ற போது அல்லது மாற்று வழியொன்று காணப்படாத போது அவ்வாறு செய்வதற்கு உத்தேசிக்கின்ற போது தவிர, தொடர்ச்சியான அடிப்படையில் கணக்குகளைப் பேணுவதற்கும் ஆணைக்குழுவின் தொடர்ச்சியுடன் தொடர்புடைய விடயங்களை வெளியிடுவதற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

1.5 **நிதியியல் கூற்றுகள் மீதான முகாமைத்துவத்தினதும் நிர்வாகத்தினதும் பொறுப்புக்கள்**

இலங்கை அரசாங்க கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கி இந்நிதியியல் கூற்றுகளை தயாரித்தலை இயலச்செய்வதற்கு தேவையான உள்ளக நிர்வாகத்தினையும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்வுக் கூற்றுகளின்றி அவற்றை நியாயமாக எடுத்துரைப்பதனையும் தயாரிப்பதனையும் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியியல் கூற்றுகளை தயாரிப்பதில் ஆணைக்குழு தொடர்ச்சியாக இயங்குவதற்கும் ஆணைக்குழுவினை தீர்த்துக்கட்டுவதற்கு முகாமைத்துவம் உத்தேசிக்கின்ற போது அல்லது மாற்று வழியொன்று காணப்படாத போது அவ்வாறு செய்வதற்கு உத்தேசிக்கின்ற போது தவிர, தொடர்ச்சியான அடிப்படையில் கணக்குகளைப் பேணுவதற்கும் ஆணைக்குழுவின் தொடர்ச்சியுடன் தொடர்புடைய விடயங்களை வெளியிடுவதற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

ஆணைக்குழுவின் அறிக்கையிடும் செயன்முறையினை பரீட்சிப்பதற்கும் நிருவாகத் தரப்பினர் பொறுப்புடையவராவர்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் நியதிகளுக்கு அமைய ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையினையும் உரிய காலத்தில் நிதியியல் கூற்றுகளையும் தயாரிப்பதனை இயலச்செய்கின்ற விதத்தில் அதன் வருவாய், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதான பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் முறையாகப் பேணப்படல் வேண்டும்.

1.6 **நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து ஒட்டுமொத்தமாக நிதியியல் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்வுக் கூற்றொன்று காணப்படுகையில், அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்வுக் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்நிதியியல் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாகக் கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வு முழுவதன் போதும் நான் தொழில்சார் நிபுணத்துவ தீர்புடனும் தொழில்சார் நிபுணத்துவ சந்தேகத்துடனும் செயற்பட்டுள்ளேன். அத்துடன்,

- குறிப்பிடப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வகுப்பதில் மோசடி அல்லது தவறு காரணமாக நிதியியல் கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான இடர்நேர்வுகளை இனங்கண்டு மதிப்பீடு செயயும்பொருட்டு, முறையான, பொருத்தமான மற்றும் உரியகால கணக்காய்வு நடைமுறைகள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படத்தப்பட்டன. உடந்தையாகவிருத்தல், ஆவணங்களை போலியாகப் புனைதல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்கள் காரணமாக மோசடிகள் நிகழுகின்றமையால், மோசடி மூலம் ஏற்படும் தாக்கமானது பொருண்மையான பிறழ்வுக் கூற்றொன்றைக் விடவும் மிகவும் தீவிரமிக்கதாகும்.

- கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வது சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதியியல் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாகக் காணப்படாதிருக்கையில், எனது அபிப்பிராயம் கணக்காய்வுசெய்யப்பட வேண்டும். பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்குக் காரணங்களாக அமையலாம்.

- நிதியியல் கூற்றுக்களின் கட்டமைப்பினதும் உள்ளடக்கங்களினதும் அடிப்படையினைத் தோற்றுவிக்கின்ற கொடுக்கல்வாங்கல்களின் மற்றும் நிகழ்வுகளின் பொருத்தமான மற்றும் நியாயமான உட்சேர்த்தல் மற்றும்/அத்துடன் வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதியியல் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பன மதிப்பீடுசெய்யப்பட்டன.

ஏனைய விடயங்களிடையே, என்னுடைய கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுளிலுள்ள ஏதாவது முக்கிய குறைபாடுகள் உள்ளடங்கலாக முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகைக்குப் பொறுப்பானவர்களுக்கு அறிவிக்கப்படும்.

**2. ஏனய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2.1 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், பின்வரும் தேவைப்பாடுகளிற்காக விசேட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன:

2.1.1 எனது அறிக்கையின் ‘முனைப்பலியுள்ள அபிப்பிராயம்’ பகுதியில் விளக்கப்பட்ட விடயங்களில் இருந்தான தாக்கங்கள் தவிர, 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்கு அவசிமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு ஆணைக்குழுவினால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.

2.1.2 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii)ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.2.1 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv)ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை காரணமாக பின்வரும் கூற்றுகளை மேற்கொள்வதில் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை:

2.2.1 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், வழமையான தொழில் செயற்பாடுகளிற்கு வெளியே ஆணைக்குழு செய்துகொண்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் ஆணைக்குழுவின் ஆளுகைச் சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

2.2.2 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(உ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், பின்வரும் அவதானிப்புகள் தவிர ஏதேனும் தொடர்புடைய ஏழுதப்பட்ட சட்டத்திற்கு அல்லது ஏதேனும் வேறு பொதுவான அல்லது ஆணைக்குழுவின் ஆளுகைச் சபையினால் வழங்கப்பட்ட விசேட ஏற்பாடுகளுக்கு முரணாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையைக் குறிப்பிடுதல்.

| **விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள்/பணிப்புரைகளுக்கான தொடர்பு** | **அவதானிப்புகள்** |
|---|---|
| (அ) 2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரசாங்கத் தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் தொழில்முயற்சி தொழிற்பாட்டு வழிகாட்டல்களின் 6.6 ஆம் பந்தி | கணக்கீட்டு ஆண்டின் இறுதியின் 60 நாட்களுக்குள் கணக்கு அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2021 ஆம் ஆண்டுக்கான கணக்குகள், 3 மாதங்கள் மற்றும் 15 நாட்கள் தாமதமாக |

| | |
|---|---|
| | அதாவது 2022 ஜூன் 15 அன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) 2003 ஜூன் 2 இன் பிடிஈ 12 ஆம் இலக்க அரசாங்கத் தொழில்முயற்சி சற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவு | ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையானது கணக்கீட்டு ஆண்டின் இறுதியின் 150 நாட்களின் பின்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள், பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (யு) 2010 டிசம்பர் 10 இன் 1/2010 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 1(உ) பிரிவு. | 12 வருடங்களைக் கொண்ட சேவைக் காலத்தினை பூர்த்திசெய்துள்ள அரசாங்க தொழில்முயற்சிகளின் சிரேஷ்ட மட்டப் பதவியிலுள்ள நிறைவேற்று அலுவலர்கள் தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவர்களாவார்கள் என குறித்துரைக்கப்பட்டுள்ள போதிலும், தீர்வையற்ற அனுமதிப்பத்திரமொன்றின் மீது 2011 யூன் 08 அன்று ஆணைக்குழுவின் பணிப்பாளர் வாகனம் ஒன்றினை இறக்குமதி செய்துள்ளமை அவ் ஏற்பாட்டிற்கு முரணானதாகும். எவ்வாறாயினும், அவரது நியமனத் திகதி 2003 யூலை 31 ஆகவிருந்ததுடன், தீர்வையற்ற வாகன இரக்குமதி திகதியளவில் அவரது சேவை 8 வருடங்களைக் கொண்டதாகவிருந்தது. ரூ. 1,568,485 செலவிட்டு இது தொடர்பில் நடாத்தப்பட்ட விசாரணைக்கு மத்தியில், விசாரணையினை பூர்த்திசெய்வதற்கோ அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையொன்றினை எடுப்பதற்கோ அல்லது பொறுப்புவாய்ந்த அலுவலரிடமிருந்து ஏற்பட்ட நட்டத்தினை அறவிடுவதற்கு ஆணைக்குழு தவறியுள்ளது |

2.2.3 பினவரும் அவதானிப்புகள் தவிர, 2018 இன் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்படுத்தலுக்கு அமைவாக, ஆணைக்குழுவின் அதிகாரங்களுக்கு, கடமைகளுக்கு மற்றும் தொழிற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும்.

அ) 1994 ஆம் ஆண்டின் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 5(ஆ) பிரிவின் நியதிகளுக்கமைவாக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பயன்பாடு மீது இலங்கையில் முன்னுறுகின்ற ஆண்டுகாலப்பகுதியில் செயலாற்றப்பட்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பச் செயற்பாடுகளின் மீளாய்வொன்றுடன் அரசாங்க மற்றும் தனியார் துறை தொழில்முயற்சிகள் அரசாங்கத்திற்கு ஆண்டறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுடன் தொடர்படைய அறிக்கைகள் 2021 டிசம்பரில் கணக்காய்வுத் திகதியளவிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1994 ஆம் ஆண்டின் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 5(உ) பிரிவின் நியதிகளுக்கமைவாக, நிறுவனக் குறிக்கோள்கள் தொடர்டபில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் முன்னேற்றம் மீளாய்வுசெய்யப்பட்டவேண்டிய போதிலும், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் வகைகளின் கீழ் வருகின்றவையான இனங்காணப்பட்ட 66 நிறுவனங்களில் 2021 டிசம்பர் அளவில் 10 ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதிக்காக (2010-2020 காலப்பகுதியினுள்) இது வரையிலும் 22 நிறுவனங்கள் தொடர்பில் மாத்திரம் மீளாய்வுகள் நடாத்தப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மதிப்பீட்டு வழிகாட்டல்களின் நியதிகளுக்கமைய, இவ்வறிக்கைகளின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு தொடர்புடைய நிறுவனமும் ஆணைக்குழுவும் பொறுப்புடையன என்பதுடன் அத்தகைய பரிந்துரைகள் பரிந்துரைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டனவா

அத்துடன் அவை நன்மைபயக்கக் கூடியனவானக இருந்தனவா எனபதை பரீட்சிப்பதன் மூலம் அறிக்கைகள் தயாரிக்கப்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) 1994 ஆம் ஆண்டின் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 5(உ) பிரிவின் நியதிகளுக்கமைவாக அமைச்சரின் முன்கூட்டிய அனுமதியின் கீழ் இரு ஆண்டுக்கு ஒருமுறை நிகழும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப சமவாயத்தை கூட்டுதல், சட்டத்தின் 2 ஆம் பிரிவின் குறிக்கோள்களுக்கு அமைவாக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய கலந்துரையாடல்களை நடாத்துதல் மற்றும் அத்தகைய கலந்துரையாடல்கள பற்றி அமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பித்தல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் ஆண்டின் பின்னர் சமவாயத்தினை நடாத்துவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவிற்கு அமைவாக சபையின் சொத்துகள் தொடர்புடைய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக தொடர்புடைய காலப்பகுதியின் போது சிக்கனமாகவும், வினைத்திறன்மிக்கதாகவும், செயல்திறன்மிக்கதாகவும், பெறுகைசெய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்றும்.

2.3 **ஏனைய விடயங்கள்**

(அ) ஆணைக்குழுவில் 06 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. 06 பதவிகளில் 05 பதவிகள் 09 மாதங்கள் தொடக்கம் 03 வரையான காலப்பகுதியில் வெற்றிடமாக இருக்கின்றன என்பது அவதானிக்கப்பட்டதுடன் 2022 ஜுன் இல் கணக்காய்வுத் திகதியளவிலும் கூட இப்பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆணைக்குழுவின் கடமைகளை நிறைவுசெய்வதற்கு முன்னைய ஆண்டுகாலப்பகுதியில் ஆணைக்குழுவினால் 2018–2021 இற்கு இடையில் 05 கொள்கை மற்றும் 06 மீளாய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2021 இறுதியளவிலும் கூட அதன் குறிக்கோள்கள் வரைவு மட்டத்தில் இருப்பது அவதானிக்கப்பட்டதுடன் அவற்றை இறுதி அறிக்கைகளாகத் தயாரித்து தொடர்புடைய நிறுவனங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

டப்லிவ் பி சி விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2021 டிசெம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டிற்கான நிதியியல் கூற்றுகள் மீதான 2018 ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்குமான பதில்கள்**

---

2.2.2

அ) 2021 ஆம் ஆண்டுக்கான கணக்கறிக்கைகள் 2022 சனவரியளவில் தயாரிக்கப்பட்டு முன்னைய ஆண்டுகளில் இடம்பெற்றதைப் போன்று பெப்ரவரி 28 அளவில் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்புவதற்காக 2022 பெப்ரவரி 22 அன்று நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இக்குழுவில் பிரதிநிதித்தவம் வகிக்கின்ற ஆணைக்குவின் இரு உறுப்பினர்களில் ஒருவர் 2022 பெப்ரவரியில் பதவிவிலகியதாலும் அக்குழுவினைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஆணைக்குழுவின் மற்றுமொரு உறுப்பினர் அக்காலத்தில் வெளிநாட்டில் இருந்தமையாலும், வெளிநாட்டு விஜயத்தின் பின்னர் நாடுதிரும்பிய சொல்லப்பட்ட உறுப்பினரின் அனுமதியினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் 2021 ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கைகள் 2022 ஜுன் 15 அன்று தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

ஆ) 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள், பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் பொருட்டு நிரல் அமைச்சின் அனுமதிக்காக 2022 ஜுன் 16 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டது. அமைச்சின் அனுமதி கிடைக்கப்பெற்றதுடன் இது தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்.

இ) இவ்விடயம் பற்றி தேடிப்பார்ப்பதற்கு முறையான விசாரணையொன்று இடம்பெறுவதுடன் 2022 செப்டம்பர் அளவில் இறுதிப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு இறுதிக்கட்டத்தில் உள்ளது. இந்நியாயசபையின் பரிந்துரையின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.3

அ)

**2018 ஆம் ஆண்டுக்கான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைமைகள்**

1994 ஆம் ஆண்டின் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் நியதிகளுக்கமைவாக, முன்னுறுகின்ற ஆண்டின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைமை பற்றி 1994 ஆம் ஆண்டின் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு ஆண்டுதோறும் அறிக்கையொன்றினை சமர்ப்பிக்க வேண்டும். இதன் விளைவாக, இயைபுடைய ஆண்டுடன் தொடர்புடைய தரவுகள், இவ்வாண்டில் சேகரிக்கப்பட்டன (2018 ஆம் ஆண்டுக்கான தரவுகள் 2019 இல் சேகரிக்கப்பட்ட அதேவேளை 2020 ஆம் ஆண்டுக்கான தரவுகள் 2020 ஆம் ஆண்டிலும் 2021 ஆம் ஆண்டுக்கான தரவுகள் 2022 இலும் சேகரிக்கப்பட்டன).

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது 2019 ஜுன் 11 அன்று இடம்பெற்ற அதன் கூட்டத்தில், முன்னைய ஆண்டுகளில் பின்பற்றப்பட்ட கட்டமைப்பிலிருந்த விலகி,

இரண்டாம்நிலைத் தரவுகளை பயன்படுத்துகின்ற பதிய திட்டமொன்றுகமைவாக 2018 ஆம் ஆண்டுக்கான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைமை அறிக்கையினை தயாரிப்பதற்கு தீர்மானித்தது. இத்தீர்மானத்தின் காரணமாக முன்னைய ஆண்டுகளில் போன்று தரவுசேகரித்தல் கேள்விக்கொத்து முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. புதிய உபாயத்திட்டமொன்றின் அடிப்படையில் தயாரிப்பதற்கு வழிகாட்டுவதற்கு ஆணைக்குழுவின் 3 உறுப்பினர்களை உள்ளடக்குகின்ற துணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக 2019 ஓகஸ்டில் தொடர்புடைய கேள்விக்கொத்துகள் நிறுவனங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. தரவுகளை வழங்குவதில் சில நிறுவனங்கள் தாமதித்தமையின் காரணமாக, இக்கேள்விக்கொத்து ஊடாக தரவு சேகரிக்கும் செயன்முறை தாமதமடைந்தது.

நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்படும் தரவுகள் என்பன மீதே அறிக்கைகளின் தரம் தங்கியிருக்கின்றது. ஆகையினால் புள்ளிவிபரங்கள் பற்றிய முறையான பகுப்பாய்வு மேற்கொள்வதற்கு பெரும்பாலான நிறுவனங்கள் அவற்றின் தரவுகளை வழங்கும் வரை இந்நிறுவனம் காத்திருக்க வேண்டியிருந் அத்துடன். அதற்கமைய, 2018 ஆம் ஆண்டுக்கான தரவுகள் 2019 ஓகஸ்ட் தொடக்கம் 2020 ஜூன் வரை சேகரிக்கப்பட்டு அதன் பின்னர் 2018 அறிக்கைகான தரவுகளை பகுப்பாய்வு செய்ததன் பின்னர் 2018 ஆண்டுக்கான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலமை அறிக்கையினை தொகுத்தல் தொடங்கப்பட்டது. எவ்வாறாயினும், கொவிட் -19 நோய்த்தொற்று காரணமாக 2020 மார்ச் தொடக்கம் நிறுவனங்கள் வீட்டிலிருந்து செயலாற்ற வேண்டி இருந்தமையினால் இறுதி அறிக்கையை தயாரிப்பதற்கு கணிசமான நேரம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இறுதி அறிக்கையானது அனுமதிக்காக 2021 ஏப்ரலில் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதனை ஆய்வுசெய்து அனுமதிப்பதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவேண்டிய போதிலும், 2021 ஆண்டு தொடக்கம் இன்று வரை நிலவிய பல்வேறு சிக்கல்கள் காரணமாக (நிரந்தரமான தலைவர் இல்லாமை, உறுப்பினர்கள் பதவிவிலகியமை காரணமாக கூட்டங்களுக்கு கூட்ட நிறைவெண் இல்லாமை போன்ற) அதனை செய்ய இயலாது இருந்தது.

இதன்விளைவாக, வரைவு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அறிக்கை - 2018, ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்கப்பெற்றதன் மீது வெளியிடப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ஆணைக்குழுவை நியமிப்பதில் தாமதம் காரணமாக இந்நோக்கத்திற்காக 2022.06.17 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் கல்வி அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தல்கள் கோரப்பட்டிருந்தன. இவ்வரைவு ஏற்கனவே நிறுவனத்தின் இணையதளத்திற்கு தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைமைகள் அறிக்கை**

2020.07.15 அன்று அமைச்சில் இடம்பெற்ற தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் அப்போதைய கல்வி, உயர்கல்வி, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க அமைச்சுக்கான செயலாளரினால் வழங்கப்பட்ட பரிந்துரைக்கமைவாக, 2019 ஆம் ஆண்டுக்கான தரவு சேகரித்தல் செயன்முறை 2020 ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 2019 மற்றும் 2020 ஆண்டுகள் இரண்டுக்குமான தரவு சேகரித்தலின் பின்னர் அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

2020 மற்றும் 2021 காலப்பகுதியில் நிலவிய நோய்தொற்று, அரசாங்க அலுவலகங்களில் உயர்ந்தபட்ச பணியாற்றும் வாய்ப்பிற்கு கடுமையான தடைகளை ஏற்படுத்தியதுடன் பல நிறுவனங்கள் வீட்டிலிருந்து பணியாற்றும் நிலைமையில் எமது கேள்விக்கொத்துடன் தொடர்புடைய தரவுகளை சேகரிப்பதற்கு இடர்பாடு காணப்படுவதாக அறிவித்திருந்தன. இதன் விளைவாக, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான தரவு சேகரித்தலானது ‘‘புதிய இயல்பு’’ நிலைமையின் கீழ் பணியாற்றுவதற்கு நாடு மீளவும் திறக்கப்பட்ட போது 2021 ஒக்டோபரில் தொடங்கப்பட்டது. ஆகையினால், இவ்வறிக்கைகளுடன் தொடர்புடைய தரவு சேகரித்தல்

செயல்முறையானது தற்போது இறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அத்தகைய தரவுகளை பகுப்பாய்வு செய்த பின்னர் இறுதி அறிக்கை தயாரிக்கப்படும். ஒரு வினாக்கொத்து 14 பக்கங்களை உள்ளடக்குவதுடன் தரவுகளின் செம்மையினை சரிபார்த்ததன் பின்னர் 2 ஆண்டுகளுக்கான தரவுகள் சேர்க்கப்பட வேண்டியிருந்தனால் அவறறைப் பூர்த்திசெய்வதற்கு சில காலங்கள் எடுத்துக் கொள்கின்றது. அதற்கமைய, உரிய அனுமதிகளின் கீழ் இவ்வறிக்கையினை விரைவாக பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆ)

1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 5(இ) பிரிவிற்கு அமைவாக, சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் முன்னேற்றத்தினை மீளாய்வதற்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும், தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் மீளாய்வுக் கையேட்டில் உள்ள வழிகாட்டலின் நியதிகளுக்கு அமைவாக இம்மீளாய்வு நடாத்தப்படுகின்றது. சட்டத்தின் நியதிகளுக்கமைய வழங்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு கட்டளைகளை வழங்குவதற்கு எமக்கு அதிகாரம் இல்லை. இம்மீளாய்வுகளின் அடிப்படைக் குறிக்கோள், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்புடைய பிரச்சினைகளை இனங்காண்பதும், பொருத்தமான கொள்கை சார்ந்த பரிந்துரைகளை வழங்குவதும் அத்துடன் கொள்கை வகுக்கும் நிறுவனமொன்றாக நாட்டின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான தொடர்புடைய நிறுவனங்களின் பங்களிப்பினை அளவிடுவதும், நடவடிக்கைக்காக தொடர்புடைய நிறுவனங்களுக்கு அறிவிப்பதுமாகும். ஆகையினால் இம்மீளாய்வுச் செயன்முறையின் போது இனங்காணப்பட்ட கொள்கைசார்ந்த பிரச்சினைகளை நாம் தேசிய மட்டத்தில் வெளியிட்டுள்ளோம்.

உதாரணம்: தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கட்டமைப்பின் முன்மொழியப்பட்ட கொள்கைகள், உள்நாட்டு விதை கொள்கை, தேசிய ஆயுர்வேதக் கொள்கை, இவற்றுக்காக அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2011 ஆண்டு தொடக்கம் நிறுவனசார் மீளாய்வுச் செய்முறை தொடங்கப்பட்டு இருந்தபோதிலும் 2018 ஆண்டு வரை வழங்கப்பட்ட ஏற்பாடுகளையும் நிறுவனத்தின் மட்டுப்படுத்தப்பட்ட மனித மற்றும் பௌதீக வளங்களையும் நோக்குகையில், ஆண்டுக்கு 1-3 நிறுவனங்கள் மீதான மீளாய்வுகளே மிகவும் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் அடிப்படையில் இச்செயன்முறையை மேலும் வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு 2018 ஆம் ஆண்டில் பல நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதை தொடங்கியது.

- அதற்கமைய, நிறுவனசார் மீளாய்வியவிற்கான நிபுணத்துவக் குழு உறுப்பினர்களை நியமிப்பதற்கு வெளிவாரி வளவாளர்களைக் கொண்ட தொகுதி ஒன்று உருவாக்கப்பட்டது.

- சர்வதேச விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வகைப்படுத்தலுக்கு அமைவாக அரசாங்க நிதியளிக்கப்பட்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களை வகைப்படுத்தல். இதன் கீழ் 2019/2018 காலப்பகுதியில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் 66 நிறுவனங்கள் இனங்காணப்பட்டன.

- நிறுவனசார் மீளாய்வில் தொடர்புடைய நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவுக்கு வழங்கப்படாமையினால், இந்நோக்கத்திற்காக

பொறிமுறை ஒன்றினை தயாரிப்பதற்கு அரசாங்க கணக்காய்வுத் திணைக்களத்துடன் 2020 ஆம் ஆண்டில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. அதற்கமைய, அதன் கணக்காய்வில் அவ்வாறான நிறுவனசார் மீளாய்வுப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு கணக்காய்வொன்றினை நடத்துவதற்கு கணக்காய்வுத் திணைக்களம் உடன்பட்டது.

- அத்துடன் விவசாய ஆராய்ச்சி கொள்கைக்கான இலங்கை மன்றம் நிறுவனசார் மீளாய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் விவசாய நிறுவனசார் மீளாய்வுச் செயன்முறையில் காணப்படுகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கும் விவசாய ஆராய்ச்சி கொள்கைக்கான இலங்கை மன்றத்திற்கும் இடையில் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

  தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் மூலம் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் பற்றிய மீளாய்வுச் செயன்முறைகளை இற்றைப்படுத்துவதற்கும், அவை பற்றி ஆய்வு செய்ததன் பின்னர் காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், தொடர்புடைய மீளாய்வுசெய்கின்ற நிறுவனங்களினால் வழங்கப்படும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வை செய்வதற்கும் 2021 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் துணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் தற்போதைய (நிதி மற்றும் மனித வள) நிலைமை பற்றி துணைக்குழு அறிவித்ததுடன் இதனை ஆழமாக ஆராய்ந்ததன் பின்னர், தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கு நிரந்தர தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்ட பின்னர் மாத்திரம் இம்மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் எனவும் அறிவித்தது. அதற்கமைய, ஆணைக்குழுவின் துணைக் குழுவின் பரிந்துரைகளின் மீது புதிய தலைவர் நியமிக்கப்பட்டதன் பின்னர் வழங்கப்படும் பரிந்துரைகளின் மீது இத்தொழிற்பாட்டைச் செயலாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சட்டத்தின் நியதிகளுக்கமைய, பணியாற்றுவதற்கு தேவையான அனுமதிகளுக்காக நிரந்தர தலைவர் ஒருவரை நியமிப்பதற்கு 2021 மற்றும் 2022 ஆண்டு காலப்பகுதியில் தொடர்புடைய அமைச்சுக்களின் செயலாளர்களிடம் பல எண்ணிக்கையான கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இ)

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு மூலம் நடத்தப்படுகின்ற விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மீதான இரு ஆண்டுக்கு ஒரு முறை நிகழும் சமவாயம் -IX (BICOST IX), சட்டத்தின் நியதிகளுக்கமைய இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இடம்பெற வேண்டும் என்பதுடன் அதற்கேற்றவாறு, 2018 நவம்பர் 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அதிமேதகு சனாதிபதியின் தலைமையில் இடம்பெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

அதற்கமைய, தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு 2018 ஆம் ஆண்டில் BICOST நிகழ்வுக்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் ஒழுங்குசெய்தது. எனினும், அக்காலப்பகுதியில் நிலவிய அரசியல் சூழ்நிலை காரணமாக சனாதியின் செயலாளரின் வாய்மூல அறிவுறுத்தலின் பேரில் கடைசி சந்தர்ப்பத்தில் அதாவது 2018 நவம்பர் 5 அன்று காலந்தாழ்த்த வேண்டியேற்பட்டது. நிறுவனத்தின் முன்னாள் தலைவரின் தலைமையில் இடம்பெற்ற அலுவலர் கூட்டத்தில் இது உத்தியோகபூர்வமாக நிறுவன அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதற்கமைய இரத்துச்செய்தமை அழைக்கப்பட்ட அனைவருக்கும் அறிவிக்கப்பட்டது.

அதன் பின்னர், சமவாயத்தை தற்காலிகமாக காலந்தாழ்த்துவதன் மீது 2018 டிசம்பர் 10 ஆம் திகதியன்று நடைபெற்ற ஆணைக்குழுவின் 199 ஆவது கூட்டத்தில் ஆணைக்குழு அறிக்கையொன்றும் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கமைய, 2019 ஆம் ஆண்டின் முதல் பகுதியில் மேற்குறித்த சமவாயத்தை நடத்துவதற்கு ஆணைக்குழு தீர்மானித்தது.

எனினும், அப்போது இயங்கிய ஆணைக்குழு 2018டிசம்பரில் கலைக்கப்பட்டது. அதன் பின்னர், புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பங்கேற்புடன் 2019 மார்ச் 14 அன்று இடம்பெற்ற ஆணைக்குழுவின் 200 ஆவது கூட்டத்தில் சமவாயத்தை 2020 ஆண்டு வரை மீண்டும் காலந்தாழ்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அப்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களும் அலுவலர்கள் இணங்கிச் செல்ல வேண்டியிருந்தது.

2020 இல் கொவிட் நோய்ப்பரவல் காரணமாக இச்செயற்பாட்டை மறு அறிவித்தல் வரை காலந்தாழ்த்த வேண்டியிருந்தது. ஆணைக்குழுக் கூட்டங்களில் இவ்விடயம் தொடர்ச்சியாக எடுக்கப்பட்ட போதிலும், நிலவிய கொவிட் நோயப்பரவல் நிலைமை அதேபோன்று 2021 சனவரி தொடக்கம் இன்று வரை ஆணைக்குழுவின் தலைவர் பதவி வெற்றிடமாகவுள்ளமை என்பன காரணமாக ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக தொடர்புடைய நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு இருக்கவில்லை. 2021 சனவரி தொடக்கம் இன்று வரை இவ் ஆணைக்குழுவின் தலைவர் இல்லாமலிருப்பது இந்நடவடிக்கையினை தொடங்குவதற்கு இயலாமைக்கு நேரடியான தாக்கத்தை கொண்டிருந்தது. ஆகையினால், புதிய தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டவுடன் இந்நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2.3

அ)

**சிரேஷ்ட விஞ்ஞானி பதவி (01 வெற்றிடம்)**

சிரேஷ்ட மட்ட பதவி ஒன்றான சிரேஷ்ட விஞ்ஞானி பதவி 2020 டிசம்பர் 21 ஆண்டு வெற்றிடமாகியதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்காக அனுப்பப்பட்டது.

ஒட்டுமொத்தமாக, ‘‘அரசாங்க செலவினத்தை மீளாய்வுசெய்தல்’’ மீது நிதி அமைச்சர் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட 2021ஓகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட CP/21/1596/304/134 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் நியதிகளுக்கு அமைவாக டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. புதிய அலுவலர்களை சேர்த்துக் கொள்வதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு 2021 டிசம்பர் 21 திகதியின் 03/2021 இலக்க வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை மூலமும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

**முகாமைத்துவ உதவியாளர் பதவி(04 வெற்றிடங்கள்)**

நிதி அமைச்சு 2019நவம்பர் 20 ஆம் திகதியின் DMS/Policy/Recruitments இலக்கம் கொண்ட அதன் கடிதத்தின் மூலம் அரசாங்க நிறுவனங்களுக்கான ஆட்சேர்புக்களை தற்காலிகமாக இடைநிறுத்தியது. எனினும், ஆணைக்குழுவின் கடமைகளை விரைவாக செயற்படுவதற்காக இரண்டாம் நிலைமட்ட பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு விசேட அனுமதி ஒன்றுக்காக ஆணைக்குழு 2020 பெப்ரவரி 19 அன்று எழுத்து மூலம் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க ராஜாங்க அமைச்சுக்கு கோரிக்கை விடுத்ததுடன் அதனை அமைச்சு ஆணைகுழுவுக்கான பிரதியொன்றுடன் அனுமதிக்காக 2020 ஜூன் 17 அன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி உள்ளது. அதற்கமைய, முகாமைத்துவ சேவைகள் திணைக்களமானது இரண்டு பதவிகளுக்கு மாத்திரம் 2020 செப்டம்பர் 25 அன்று அனுமதி வழங்கியது. அவ்விரு பதவிகளுக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பத்திரிகை விளம்பரங்களை வெளியிடுதல் நாட்டில் ஏற்பட்ட நோய்ப்பரவல் காரணமாக தாமதமடைந் அத்துடன். எனினும் தொடர்புடைய ஆட்சேர்ப்புக்காக

20121 சனவரி 24 அன்று பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்பட்டதுடன் நோய்ப்பரவல் மற்றும் பயண தடைகள் காரணமாக ஆட்சேர்ப்பு மீண்டும் தாமதமடைந்தது.

**அலுவலக உதவியாளர் (01 வெற்றிடம்)**

ஆரம்ப மட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி பெற்றுக்கொள்வதற்கு 2020 செப்டம்பர் 21 அன்று அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டதுடன் ஆணைக்குழுவிற்கான பிரதி ஒன்றுடன் 2020 ஒக்டோபர் 15 அன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்காக அதனை அமைச்சு அனுப்பியிருந்தது. எனினும், அனைத்து நிறுவனங்களிலும் உள்ள ஆரம்ப மட்ட சேவை வகையிலுள்ள ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வது 2020 பெப்ரவரி 21 திகதியின் DMS/Policy/Recruitments ஆம் இலக்க திறைசேரிக்கான செயலாளரின் கடிதம் மற்றும் 01/2020ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை என்பவற்றின் நியதிகளுக்கு அமைவாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும் அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டவாறு ஆரம்ப மட்ட வகையில் ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்கு தீர்மானமொன்று எடுக்கப்பட்டுள்ளது ஆகையினால், தொடர்புடைய விண்ணப்பங்கள் 2020 ஒக்டோபர் 21 அன்று அமைச்சுக்கு அனுப்பப்பட்டன.

மேலும், நிறுவனத்தின் ஆற்றல்வாய்ந்த தொழிற்பாட்டுக்காகவும் அதேபோன்று சட்டத்தின் நியதிகளுக்கமைய கடமைகளைச் செயலாற்றுவதற்கும் தொடர்புடைய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு 2022 பெப்ரவரி 19 திகதியின் NASTEC/07/CADRE ஆம் இலக்க கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் விசேட அனுமதிக்காக அமைச்சு ஊடாக கோரிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

08 ஒகஸ்ட் 2022 ஆம் திகதியின் 04/2022 ஆம் இலக்க பொதுத் தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் நியிதிகளுக்கு அமைய அனைத்து ஆட்சேர்ப்புகளும் தற்போது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

ஆ)

**வரைவு செய்யப்பட்ட ஐந்து கொள்கைகளுக்கான அனுமதி**

2018 தொடக்கம் 2021 வரையான காலப்பகுதியில் காலத்திற்கு காலம் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மாற்றங்கள் (2018–2021 வேறுபட்ட காலப்பகுதியின் போது ஆணைக்குழுவுக்கு ஐந்து தலைவர்களும் மூன்று ஆணைக்குழுக்களும் காணப்பட்டன) இடம்பெற்றதுடன் 2021 ஆம் ஆண்டின் போது ஆணைக்குழுவுக்கு முழுநேர தலைவர் ஒருவர் இல்லாமை என்பன காரணமாக வரைவுக் கொள்கைகள் மற்றும் மீளாய்வு அறிக்கைகள் மீது ஆணைக்குழுவில் காலத்திற்கு காலம் எழுப்பப்பட்ட கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய மேலதிக நடவடிக்கைக்காக இறுதி அனுமதி எடுக்கப்பட முடியாதிருந்தது. ஆகையினால் புதிய தலைவர் நியமிக்கப்பட்டதன் பின்னர் பெற்றுக்கொள்ளப்படவுள்ள பரிந்துரைகளின் மீது இச்செயற்பாட்டை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது

**06 வரைவு மீளாய்வு அறிக்கைகளுக்கான அனுமதி**

2020 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியிலே தான் தொடர்புடைய நிறைவுசெய்யப்பட்ட மீளாய்வு அறிக்கைகள் நிறுவனத்திற்கு கிடைக்கப்பெற்றன. ஆணைக்குழுவின் கூட்ட நிறைவெண் இல்லாமை காரணமாக கூட்டம் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை. மீளாய்வு நெறிமுறைகளுக்கு

அமைவாக மேலதிக நடவடிக்கைகளுக்காக ஆணைக்குழுவின் அனுமதியினை பெற்றுக்கொள்வது அவசியமாகும். தற்போதய நிலைமைக்கமைவாக தொடர்புடைய அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. இது தொடர்பில் அப்போதைய தொழில்நுட்ப அமைச்சின் செயலாளருக்கு 2021 டிசம்பர் 14 மற்றும் 2022 ஏப்ரல் 22 ஆம் திகதிகளில் கடிதங்கள் அனுப்பப்பட்டன. இதற்கு முறையான பதில்கள் எதுவும் கிடைக்கவில்லை என்பதுடன் று தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு ஆணைக்குழுவை மேற்பார்வை செய்கின்ற கல்வி அமைச்சின் செயலாளருக்கு இவ்விடயம் தொடர்பில் 2022 ஜூன் 27 ஆம் திகதியன்று அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் அறிவுறுத்தல் கோரப்பட்டிருந்தது. அதற்கமைய, அப்பரிந்துரைகளை இதை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**ஜானக எஸ் கீகியனகே**
பதில் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அலுவலர்
தலைவருக்காக